Back cover:

பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்,
சென்னை ஆர்ச் டயோசிஸ், கீழ்படப்பை,
சென்னை - 601 301, தமிழ் நாடு, இந்தியா.
www.bec.org

Front cover:

# பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்
## ஆர்தொடாக்ஸ்

# லெக்ஷ்னரி 2024–2025

ஞாயிற்றுக்கிழமை மற்றும் சிறப்பு நாட்களில்
வாசிக்கும் வேதவசனங்கள்

# பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்
## ஆர்தொடாக்ஸ்

# லெக்ஷ்னரி

ஞாயிற்றுக்கிழமை மற்றும் சிறப்பு நாட்களில்
வாசிக்கும் வேதவசனங்கள் 2024-2025

*Imprimatur*

Metropolitan, Believers Eastern Church

Copyright © 2024

*Prepared by*
Synodal Department of Liturgics and Catechization

All rights reserved. No portion of this book may be reproduced in any form without prior written permission from the publisher.

பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்,
சென்னை ஆர்ச் டயோசிஸ், கீழ்படப்பை,
சென்னை - 601 301, தமிழ் நாடு, இந்தியா.
www.bec.org

Price : ₹ 50.00

*Printed in India.*

## பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | 5 |
| 2. | வேத வாசிப்பு | 6 |
| 3. | சர்ச் காலண்டர் | 66 |
| 4. | சிறப்பு நாட்கள் | 70 |

# முன்னுரை

ஒன்றான மெய் தேவனாகிய பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவருக்கு மகிமை உண்டாவதாக ஆமென். ✠

பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச்சின் அடிப்படைக் கொள்கையானது தேவனுடைய வார்த்தையைப் படிக்கவும், தியானிக்கவும், கற்பிக்கவும் முக்கியத்துவம் அளிப்பதாகும். இது அப்போஸ்தலர்களாலும் திருச்சபை பிதாக்களாலும் நாம் பின்பற்றும்ப்படி கொடுக்கப்பட்ட மாதிரியாக மட்டுமல்லாமல், தேவனுடைய வார்த்தையானது நம்முடைய வாழ்க்கையை மாற்றவும், மறுரூபப்படுத்தவும் அடிப்படை வல்லமையைக் கொண்டுள்ளதாக இருக்கிறது.

கர்த்தருடைய வார்த்தையானது வாழ்க்கையை உள்ளும் புறமும் மாற்றத்தை ஏற்படுத்த வல்லமை உடையதாக இருக்கிறது. "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. (எபிரேயர் 4:12)

பரிசுத்த வேதாகமம் நமக்கு வாழ்வதற்கு தெய்வீகக் கொள்கைகளை வழங்குகிறது, அது நமக்கு நம்பிக்கையும் விசுவாசத்தையும் கொடுக்கிறது "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். (ரோமர் 10:17) ஆகவே நமது திருச்சபையில் கர்த்தருடைய வார்த்தையை படிப்பதும் தியானிப்பதும் அதை தொடர்ச்சியாக போதிப்பதும் முக்கியமாகும்.

இந்த முடிவை அடைவதற்காகவே இது வடிவமைக்கப்பட்டுள்ளது, இந்த லெக்ஷனரி வேதவாக்கியங்களின் ஒரு தொகுப்பாகும். ஆகவே வருடம் முழுவதும் நம்முடைய ஞாயிறு ஆராதனைக்கும் மற்ற விசேஷ நாட்களுக்கும் வேதப் பகுதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதனால் நாம் முறையாகப் தேவனுடைய வார்த்தையை படிக்கவும், தியானிக்கவும் இது வழிகாட்டியாக அமைகிறது.

இந்த லெக்ஷனரி நமது திருச்சபைகள் அனைத்தும் வலிமையோடும் துடிப்போடும் ஆரோக்கியத்தோடும் தேவனோடு நடக்க வழி வகுக்கும்.

பிதா, குமாரன் பரிசுத்த ஆவியானவரின் ஆசீர்வாதங்கள் உங்களுடனே இருப்பதாக. ஆமென். ✠

✠ மோரன் மோர் சாமுவேல் தியோபிலஸ்
மெட்ரோபாலிடன்

திருச்சபையின் சர்வதேச தலைமையகம்
29 அக்டோபர் 2024

**3 நவம்பர் 2024**

## முதலாம் ஞாயிறு

## திருச்சபையை பரிசுத்தப்படுத்தல் (கூதேஷ் ஈத்தோ)

**வேத வாசிப்பு**

| | | | |
|---|---|---|---|
| ஏசாயா 6:1-8 | சங்கீதம் 43 | 1 கொரிந்தியர் 3:16,17; 6:15-20 | பரிசுத்த மத்தேயு 16:13-23 |

**நற்செய்தியின் கருப்பொருள்: இயேசுவே கிறிஸ்து, தேவனுடைய குமாரன்**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

அவர் யார் என்று மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்ட பிறகு, இயேசு அவருடைய சீடர்களிடம் அதே கேள்வியை கேட்கிறார். பரிசுத்த பேதுரு தெய்வீக வெளிப்பாட்டின் மூலம் சரியாக பதிலளிக்கிறார், மற்றும் இயேசு திருச்சபை இந்த விசுவாச அறிக்கையின் மேல் கட்டப்படும் என்று கூறுகிறார். அதற்குப் பின், இயேசு தமக்கு வரவிருக்கும் துன்பங்கள் பற்றி பேசும் போது, அதை புரிந்துகொள்ள முடியாமல், பரிசுத்த பேதுரு சாத்தானின் எண்ணங்களை வெளிப்படுத்துகிறார்

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

இயேசு யார் என்பதைப் பற்றி மக்கள் வெவ்வேறு புரிதல்களைக் கொண்டிருக்கலாம் இயேசு கிறிஸ்து, ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று விசுவாசத்தினால் அறிக்கையிடுகிறோம் !

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. இந்த அறிக்கையிடலே திருச்சபையின் அஸ்திபாரம்.

2. திருச்சபையின் ஒரு பகுதியாக, நாம் தினமும் நமது விசுவாச அறிக்கையாகிய விசுவாசப் பிரமாணத்தை (நைசியன் கிரீட்) வீட்டு ஜெபம் மற்றும் திருச்சபைகளில் அறிக்கையிடுகிறோம்

3. எதுவும், மரணமோ (பாதாளமோ) கூட இயேசுவைப் பற்றியும் அவர் உலகிற்க்கு அளிக்கும் இரட்சிப்பைப் பற்றியும் பிரகடனம் செய்வதிலிருந்து திருச்சபையை தடுக்க முடியாது .





**10 நவம்பர் 2024**

## 2-வது ஞாயிறு

## திருச்சபையின் அர்ப்பணிப்பு (ஹ-டோஷ் ஈத்தோ)

**வேத வாசிப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1 இராஜாக்கள் 8:22-40 | சங்கீதம் 78:1-7 | எபிரேயர் 9:1-14 | பரிசுத்த யோவான் 10:22-38 |

**நற்செய்தியின் கருப்பொருள்: தேவனுடைய குரலைக் கேட்டு, அவரைப் பின்பற்றுங்கள்.**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

இயேசு, என் சத்தத்திற்குச் செவிக்கொடுத்து என்னை பின்பற்றுகிறவர் களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிற மேய்ப்பன் நான் என்று கூறுகிறார், அவருடைய அற்புதங்களைக் கண்டிருந்தும் அவரை விசுவாசிக்காத அநேகர் செவிக்கொடுக்காதவர்களாக இருந்தனர்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

இயேசு நல்ல மேய்ப்பன், அவரைப் பின்பற்றி செவிக் கொடுத்தால் நாம் பாதுகாப்பாக இருப்போம். அவர் தன்னை தேவகுமாரன் என்றபடியால் பரிசேயர்கள் இயேசுவைக் கல்லெறியத் தயாராகிறார்கள் என்பதையும் நாம் அறிந்துகொள்கிறோம்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. நாம் கர்த்தருடைய வார்த்தையை கேட்கும்போதும், வாசிக்கும்போதும், தேவனுடைய சத்தத்திற்கு செவி கொடுக்கிறோம்.

2. செவி கொடுத்தல் என்பது கீழ்ப்படிதல் ஆகும்; கீழ்படிதல் என்பது பரிசுத்த வேதாகமத்தில் தேவன் கூறியவற்றிற்கு கீழ்ப்படிவதாகும்.

3. நாம் மேய்ப்பனின் சத்தத்திற்கு செவி கொடுக்கும்போது நாம் தவறான பாதையை நோக்கி போகமாட்டோம் என்று விசுவாசம் கொள்ளலாம்.

**17 நவம்பர் 2024** **பெற்றோர்கள் ஞாயிறு-***சிறப்பு காணிக்கை*

**3-வது ஞாயிறு**

**அறிவிப்பின் காலம்: யோவான் ஸ்நானன் பிறப்பு முன்னறிவிக்கப்பட்டது**

**வேத வாசிப்பு**

| ஆதியாகமம் 17:15-22 | சங்கீதம் 123 | 2 பேதுரு 1:1-15 | பரிசுத்த லூக்கா 1:5-25 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள்: தேவனுடைய வாக்குத்தத்தங் களை நம்புங்கள்**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

ஒரு குழந்தை வேண்டும் என்று எண்ணிய வயதான நீதியுள்ள தம்பதியினரின் ஜெபத்திற்கு தேவன் அற்புதமாக பதிலளிக்கிறார். குழந்தைக்கு என்ன பெயர் வைக்க வேண்டும், அவரை வளர்ப்பதற்கும், அனைவருக்கும் இரட்சிப்பைக் கொண்டுவருவதில் அவருடைய பங்கு என்னவாக இருக்கும் என்று கர்த்தருடைய தூதர் கூறுகிறார். ஆனால் சகரியாவுக்கு அவிசுவாசமாக இருந்ததின் விளைவு குழந்தை பிறக்கும்வரை ஊமையாக இருந்தான்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

தேவன் நம்முடைய ஜெபங்களுக்கு அவருடைய வழிகளில் அற்புதமாய் பதிலளிக்கிறார். ஆகவே நாம் நம் வாழ்வில் தேவனுடைய வாக்குதத்தங்களை விசுவாசித்து செயல்பட வேண்டும்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. சூழ்நிலை சாதகமற்று இருந்தாலும் தேவனால் அற்புதம் செய்ய கூடும்.

2. ஆனால் விசுவாசம் இல்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம், என்பதைப்போல நாம் விசுவாசமாக இருக்க வேண்டும். (எபிரெயர் 11:6).

3. தேவனுடைய வாக்குறுதிகளின்படி செயல்பட விசுவாசம் நம்மை வழி நடத்த வேண்டும்.



லெக்ஷ்னரி 2024-'25

**21 நவம்பர் 2024**

**தியோடோகோஸின் நுழைவு பண்டிகை**

**வேத வாசிப்பு**

| யாத்திராகமம் 40:1-5, 9-10 | 1 இராஜாக்கள் 8:1, 3-4, 6-7, 9-11 | எபிரெயர் 9:1-7 | பரிசுத்த லூக்கா 10:38-42, 11:27-28 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள்: நாம் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயம்.**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

இந்த பண்டிகை, பரிசுத்த திருச்சபையின் ஜீவனுள்ள பாரம்பரியத்தால் பகிர்ந்தளிக்கபட்டது, பரிசுத்த மரியாள் குழந்தையாக இருந்தபோது எருசலேம் ஆலயத்திற்கு கொண்டு சென்றதை நினைவுகூருகிறது.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

பரி.மரியாளின் பெற்றோர்கள் தங்கள் வேண்டுதலை நிறைவேற்ற எருசலேம் தேவாலயத்திற்கு பரி.மரியாளை கொண்டு சென்றதை அறிகிறோம், அங்கு ஆசாரியன் சகரியா (பரிசுத்த யோவான் ஸ்நானனின் தந்தை) அவளை ஏற்றுக்கொண்டார், அவள் பரிசுத்த யோசேப்பிற்கு நிச்சயிக்கப்பட்ட காலம் வரை அங்கு தேவனுக்கு சேவை செய்து வாழ்ந்தாள்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. மரியாளின் பெற்றோர் அவளை தேவனின் சேவைக்கு அர்ப்பணித்ததைப் போல, நாமும் பெற்றோர்களாக நம் பிள்ளைகளை அர்ப்பணிப்போம்.

2. அன்னை மரியாவின் வாழ்க்கையைப் பற்றி சிந்திக்க இது ஒரு நல்ல நேரம் - குறிப்பாக தேவனுக்கு கீழ்ப்படிய அவள் தன்னை முழுவதும் ஆயத்தப்படுத்தினாள்.

3. இந்த பண்டிகை கிறிஸ்துமஸ்-க்கு ஒரு மாதத்திற்கு முன்பு மட்டுமே கொண்டாடப்படுவதால், கிறிஸ்துவின் பிறப்பின் பண்டிகையை எதிர்நோக்க இது நமக்கு உதவுகிறது (கிறிஸ்துமஸ்).

**24 நவம்பர் 2024**

## 4-வது ஞாயிறு

## அறிவிப்பின் காலம்: இயேசுவின் பிறப்பு மரியாளுக்கு அறிவிக்கப்பட்டது

**வேத வாசிப்பு**

| | | | |
|---|---|---|---|
| ஆதியாகமம் 28:10-22 | சங்கீதம் 40:5-10 | எபிரேயர்2:14-18 | பரிசுத்த லூக்கா 1:26-38 |

**நற்செய்தியின் கருப்பொருள்: கீழ்ப்படிதலுடன் பதிலளித்தல்**

*இந்த பண்டிகை எதைப் பற்றியது?*

தேவ தூதன் காபிரியேல் மனித குலத்திற்கு மிகப்பெரிய செய்தியை அறிவிக்க கலிலேயாவில் உள்ள மரியாள் என்ற இளம் கன்னிப்பெண்ணிடம் அனுப்பப்பட்டார். அவளுடைய பதில் தேவனுக்கு கீழ்ப்படிதலாய் இருந்தது.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

விசுவாசம், கீழ்ப்படிதல் மற்றும் பரிசுத்த தன்மையுடன் வாழ்ந்த மரியாள் நமக்கு சிறந்த உதாரணம், ஏனென்றால் அவள் சாத்தியமற்ற சூழலை அறிந்தும், தேவதூதன் சொன்னதை நம்பி தேவசித்ததிற்கு தன்னை அற்பணித்தாள்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. தேவனின் தாயாகிய மரியாளை நாம் மதிக்கிறோம், போற்றுகிறோம், மற்றும் அவள் ஆசீர்வதிக்கப்பட்டவள்! என்று அழைக்கிறோம்.
2. தேவனை நம்புங்கள், அவரது சித்ததின்படி ஆகட்டும் என அறிக்கை பண்ண வேண்டும்.
3. அன்னை மரியாளின் வாழ்க்கை கிறிஸ்துவை சுட்டி காட்டியது போல், நம்முடைய வாழ்க்கையும் கிறிஸ்துவை சுட்டிக்காட்டட்டும்.





**1 டிசம்பர் 2024** **பெண்கள் ஞாயிறு** - *சிறப்பு காணிக்கை*

## 5-வது ஞாயிறு

## அறிவிப்பின் காலம்: பரிசுத்த மரியாள் எலிசபெத்தை சந்தித்தல்

**வேத வாசிப்பு**

| | | | |
|---|---|---|---|
| நீதிமொழிகள் 31:10-31 | சங்கீதம் 80:1-7,17-19 | 1 பேதுரு 3: 1-7 | பரிசுத்த லூக்கா 1:39-56 |

**நற்செய்தியின் கருப்பொருள்: ஆசீர்வாதமாக இருக்கவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

இந்த வேத பகுதி அன்னை மரியாளுடன் எலிசபெத்தின் சந்திப்பு பற்றியது. இங்கே அன்னை மரியாள் ஒரு தீர்க்கதரிசனப் பாடலைப் பாடுகிறார், அவள் அதிசயமாக கருத்தரிக்க தேவன் உதவினார் என்று கூறுகின்றாள். அவள் தன்னைத் தாழ்த்தி இவ்வளவு பெரிய காரியங்களை செய்த தேவனை உயர்த்துகிறாள்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

அன்னை மரியாள் தேவனின் வாக்குறுதியை நம்பி ஏற்றுக்கொண்டபடியால் இப்போது அனைத்து தலைமுறையினருக்கும் ஆசீர்வாதமாக அவர்கள் மாறி உள்ளார்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. தேவன் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றும்போது அவரை துதிக்க மறக்காதீர்கள்.
2. ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கபட்டவள் என்று நாம் அழைக்கும் போது இந்த வேத பகுதியில் உள்ள தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுகிறோம்.
3. எல்லாவற்றிலும் மிகப் பெரிய பரிசாகிய - இயேசு கிறிஸ்துவின் மூலம் கிடைக்கும் இரட்சிப்பை! மற்றவர்களுக்குச் சொல்லவும், தேவனுக்கு எல்லா மகிமையும் கொடுக்கவும் இது ஒரு சிறந்த தருணம் ஆகும்.

**8 டிசம்பர் 2024** **சிறுவர் ஞாயிறு-*சிறப்பு காணிக்கை***

**6-வது ஞாயிறு**

**அறிவிப்பின் காலம்: யோவான் ஸ்நானனின் பிறப்பு (முன்னோடி)**

| வேத வாசிப்பு | | | |
|---|---|---|---|
| 1 சாமுவேல் 1:20-28 | சங்கீதம் 127:1-5 | எபேசியர் 6:1-4 | பரிசுத்த லூக்கா 1:57-80 |

**நற்செய்தியின் கருப்பொருள்: நம் வாழ்க்கை ஜனங்களுக்கு கிறிஸ்துவைக் காட்டகூடியதாக இருக்க வேண்டும்.**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

சகரியாவுக்கும் எலிசபெத்துக்கும் தேவன் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டன, சகரியாவின் வாய் திறக்கப்பட்டது மற்றும் அவர்கள் தங்கள் குழந்தைக்கு தேவனுடைய ஈவு என்று அர்த்தம் கொள்ளும் யோவான் என்று பெயரிடுகிறார்கள், மேலும் அவரது சிறப்பான அழைப்பின் காரணமாக, யோவான் ஸ்நானன் வனாந்தரத்தில் தங்கி மிகவும் சிறப்பான ஊழியத்திற்கு தயாராகி வளர்ந்து வந்தார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

தேவன் தம்முடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறார் என்றும், தேவன் அவரது சிறப்பான நோக்கங்களுக்காக அழைத்து தேர்ந்தெடுக்கப் பட்டவர்களை ஆயத்தப்படுத்துகிறார் என்று கற்றுக்கொள்கிறோம், மற்றும் அந்த நோக்கமே யோவான் ஸ்நானன் 'முன்னோடியாக' இருந்து இயேசுவுக்கு வழியை ஆயத்தம் செய்தார்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம் என்பதால், பெற்றோர்கள் அவர்களை தேவ ஆலோசனையின்படியே வளர்க்க வேண்டும்.

2. பெற்றோர்களாகிய நாம், நம் பிள்ளைகள் அநேகரை இரட்சிப்புக்கு நேராக கொண்டுவர தங்கள் வாழ்க்கையை அர்பணிக்கும்படியாக ஜெபிக்க வேண்டும்.

3. நமது செயல்களும் பரிசுத்த யோவான் ஸ்நானனைப்போல கிறிஸ்துவில் உள்ள இரட்சிப்பை பெற்றுக் கொள்ளத்தக்கதாக நமது வார்த்தையிலும், செயலிலும் காணப்பட வேண்டும்.





**15 டிசம்பர் 2024**

**7-வது ஞாயிறு**

**பரிசுத்த யோசேப்புக்கு அறிவிக்கப்படுதல்**

| வேத வாசிப்பு | | | |
|---|---|---|---|
| ஏசாயா 45:18-25 | சங்கீதம் 126 | 1 பேதுரு 2:11-17 | பரிசுத்த மத்தேயு 1:18-25 |

**நற்செய்தியின் கருப்பொருள்: நாம் கீழ்ப்படிந்தால் தேவனுடைய திட்டங்கள் நிறைவேறும்**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

இருவரும் கூடிவரும் முன்பே மரியாள் கருவுற்றதை யோசேப்பு அறிந்த பிறகு, மரியாளைத் தள்ளிவிடாமல் தன் மனைவியாக ஏற்றுக்கொள்ளும்படி தேவதூதன் கூறுகின்றார். பின்னர் அவர் முற்றிலும் இயற்கைக்கு அப்பாற்பட்டதை ஏற்றுக்கொள்கிறார் - அதாவது மரியாளின் குழந்தை சாதாரண குழந்தை அல்ல, அது பரிசுத்த ஆவியானவரால் கருத்தரிக்கப் பட்டது.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

இயேசு பிறப்பதற்கு ஏறக்குறைய 600 ஆண்டுகளுக்கு முன்பு, ஏசாயா தீர்க்கதரிசி இரட்சகர் கன்னியின் வயிற்றில் பிறப்பார் என்று முன்னறிவித்தார். இப்பொழுது சரியான நேரத்தில் தீர்க்கதரிசனம் நிறைவேறியது. தேவன் தம்முடைய வாக்குத்தத்தை நிறைவேற்றுவார் என்பதை நாம் அறிய வேண்டும்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. பரிசுத்த யோசேப்பு தேவனுக்கு கீழ்ப்படிந்தது போல நாமும் அவருடைய வழியை புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் தேவன் சொல்வதற்கு கீழ்படிய வேண்டும்.

2. உற்சாகமடைந்திருங்கள்: ஒருவேளை கால தாமதம் ஆனாலும் தேவன் தம்முடைய வாக்குத்தத்தை நிறைவேற்றுவார்.

3. பொறுமையாக இருக்க கற்றுக்கொள்ளுங்கள்; விசுவாசமாய் இருங்கள்.

**22 டிசம்பர் 2024 கிறிஸ்துமஸ் தினத்திற்கு முந்தைய ஞாயிறு**

**8-வது ஞாயிறு**

**வேத வாசிப்பு**

| ஏசாயா 11:1-9 | சங்கீதம் 89:1-4, 19-26 | அப்போஸ்தலர் 3:16-26 | பரிசுத்த யோவான் 1:1-14 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள்: தேவன் மனிதனானார்**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

பரிசுத்த வேதாகமத்தில் இது மிகவும் முக்கியமான பகுதியாகும் அந்த வார்த்தை - அதாவது தேவனின் நித்திய குமாரனாகிய இயேசு, நம்மைப் போலவே முழுமையான மனித ரூபமும் (மாமிஷ தேகம் கொண்டு) நம்மிடையே வாசம் பண்ணினார். (இம்மானுவேல் - தேவன் நம்மோடு இருக்கிறார்)

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

இயேசு முழுமையாக (100%) தேவன் என்றும் அதே சமயம் முழுமையாக (100%) மனிதன் என்றும் அறிகிறோம். உலகத்தின் ஒளியாகிய இயேசுவை நம்முடைய வாழ்வில் பெற்றுக் கொள்வதற்கும், தேவனுடைய ஜீவனில் பங்கு பெற்று அவருடைய பிள்ளைகளாய் மாறுவதற்கும் விவரிக்க முடியாத சிலாக்கியத்தை பெற்றிருக்கிறோம் என்று அறிகிறோம்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. மனிதனாக அவதரித்த இயேசு, அவர் எப்படி வாழ்ந்தார், செயல்பட்டார் என்பதையும் அறிந்துகொள்ள சுவிஷே பகுதிகளைப் படியுங்கள்.
2. இன்று நாம் மற்றவர்களுக்கு இயேசுவைப் பிரதிநிதித்துவப்படுத்து கிறோம்; அவர் வாழ்ந்தது போல் நாமும் வாழ்வோம்.
3. இன்னும் அநேகர் ஆவிக்குரிய இருளில் உள்ளனர். தேவனுடைய ஒளி அவர்களுடைய இருதயத்தில் பிரகாசிக்கும்படி ஜெபிப்போம்.





**25 டிசம்பர் 2024**

**இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் பண்டிகை - கிறிஸ்துமஸ் (யெல்தோ)**

**வேத வாசிப்பு**

| ஏசாயா 9:1-7 | சங்கீதம் 96 | எபிரேயர் 1:1-12 | பரிசுத்த மத்தேயு 2:1-12 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள்: தேவன் தமது இரட்சிப்பின் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறார்**

*இந்த பண்டிகை எதைப் பற்றியது?*

தேவன் மனித வாழ்வில் மனிதனாக பிறந்ததை கொண்டாடுகிறோம் - இயேசு கிறிஸ்து.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

இயேசு கிறிஸ்து ஒரு குழந்தையாக பிறந்து தேவனுடைய இரட்சிப்பின் வாக்குத்தத்தை நிறைவேற்றுகிறதை அறிகிறோம், தெய்வீக பிறப்பில் தேவனுடைய வெளிப்பாடு நிறைந்திருக்கிறது. தீர்க்கதரிசனங்களை நிறைவேற்ற கூடிய ஒரு குழந்தை, பெத்லகேமில் உள்ள ஒரு மாட்டுக் தொழுவத்தில் பிறக்கிறது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் உன்னத காணிக்கைகளைக் கொண்டு வந்ததும், நட்சத்திரம் அவர்களை வேறு வழியாய் திரும்பிச் செல்ல வழிவகுத்தது. வயலில் உள்ள மேய்ப்பர்களுக்கு பிறப்பை அறிவித்த தேவதூதர்கள், குழந்தை இயேசுவை கொடிய ராஜாவின் கோபத்திலிருந்து அற்புதமாக பாதுகாக்கப்படுகிறார்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. கிறிஸ்மஸ் காலத்தில், கிறிஸ்து பிறந்திருக்கிறார் என்று அவரை மகிமைப்படுத்துவதின் மூலம் ஒருவரையொருவர் வாழ்த்துங்கள்.
2. கிறிஸ்துமஸைக் கொண்டாடுங்கள், தேவன் நமக்கும் மனிதகுலத்திற்கும் செய்ததைக் குறித்து மகிழ்ச்சியுடன் கொண்டாடுங்கள்.
3. ஆக்கப்பூர்வமான, வார்த்தையிலும் செயலிலும். கிறிஸ்துமஸ் நிகழ்வை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள இந்த வாய்ப்பைப் பயன்படுத்தவும்.

| 29 டிசம்பர் 2024 | | | கிறிஸ்துமஸ்க்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு |
|---|---|---|---|
| 9-வது ஞாயிறு | | | |
| வேத வாசிப்பு | | | |
| ஆதியாகமம் 37:12-28 | சங்கீதம் 148 | 1 கொரிந்தியர் 10:1-13 | பரிசுத்த மத்தேயு 2:9-15, 19-23 |

**நற்செய்தியின் கருப்பொருள்: தேவனுடைய வழிநடத்துதலைப் பின்பற்றுங்கள்**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

இயேசுவை குழந்தை பருவத்திலே அழிக்க நினைத்த தீயவனின் கொடிய திட்டங்களை தேவன் எப்படி முறியடிக்கிறார் என்றும் எல்லாவற்றிலும் இயேசு கிறிஸ்துவை பற்றிய தீர்க்கதரிசனங்கள் எவ்வாறு நிறைவேறு கின்றன என்பதை பற்றியும் இந்த பகுதி கூறுகிறது.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

எதிரிகள் எவ்வளவு முயன்றாலும், தேவனுடைய திட்டத்தையும் நோக்கத்தையும் அழிக்க முடியாது. தேவன் தம்முடைய வாக்குறுதிகளை மட்டும் நிறைவேற்றுவார், அவருடைய வாக்குத்தத்தங்களை யாரைக் கொண்டு நிறைவேற்றுகிறாரோ அவர்களை அவர் காப்பாற்றுகிறார்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. சாஸ்திரிகளைப் போலவும் இயேசுவின் பூமிக்குரிய தந்தையாகிய பரிசுத்த யோசேப்பை போலவும் தேவனின் வழிகாட்டுதலைப் பின்பற்றுங்கள்.

2. பெற்றோர்கள், குறிப்பாக தகப்பன்மார்கள், தங்களின் இளம் வயது குழந்தைகளை காப்பாற்றும் பொறுப்பை கொண்டவர்கள் ஆகவே தேவனுக்கு ஜாக்கிரதையாய் செவி கொடுக்க வேண்டும்.

3. உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்திற்காகவும், குழந்தைகளுக் காகவும். தேவனுடைய பாதுகாப்பில் நம்பிக்கை வையுங்கள்.





| 5 ஜனவரி 2025 | | | கிறிஸ்துமஸ்க்கு பின்வரும் இரண்டாம் ஞாயிறு |
|---|---|---|---|
| 10-வது ஞாயிறு | | | |
| வேத வாசிப்பு | | | |
| ஏசாயா 26:1-12 | சங்கீதம் 85 | எபிரேயர் 11:23-31 | பரிசுத்த லூக்கா 2:40-5 |

**நற்செய்தியின் கருப்பொருள்: மனித தயவிலும் தேவ கிருபையிலும் வளருதல்**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

தங்கள் வழக்கத்தின் படியே பஸ்கா பண்டிகையை கொண்டாடிய பிறகு, குழந்தையாகிய இயேசு இல்லை என்பதை குடும்பத்தினருக்கு ஒரு நாளுக்கு பின்பே தெரிகிறது, பெற்றோர்கள் தேவாலயத்தில் இயேசு பேசிக் கொண்டிருப்பதையும், அவருடைய ஞானத்தை கேட்டவர்கள் ஆச்சரியப்படுவதையும் கண்டார்கள், இயேசு தன் பெற்றோரோடு திரும்பி பின்பு தேவ கிருபையிலும் மனித தயவிலும் வளருகின்றார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

இயேசு தம் வாழ்வின் நோக்கத்தை மிகத் தெளிவாக அறிந்திருந்தார்; இன்னும் கூட அவரது ஞானம் ஆச்சரியமாக இருந்தது, அவர் கீழ்படிதல் உள்ளவராய் வளர்ந்தார், அதனால் தேவ கிருபையும், மனித தயவும் அவருக்கு கிடைத்தது .

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. நமது வாழ்க்கையில் நமக்கு மேலான அதிகாரத்திற்கு கீழ்படிந்து இருக்க வேண்டும். எ.கா: குழந்தைகள் பெற்றோருக்கு கீழ்படிந்து இருப்பது போல .

2. உங்கள் மேலான அதிகாரத்திற்கு கீழ்ப்படிந்து வளர்வது தேவ கிபையையும் மனுஷ தயவையும் கொண்டுவரும்.

3. இயேசுவைப் போலவே, நாம் எங்கிருந்தாலும், பிதாவிற்கு அடுத்த காரியமாகிய - இரட்சிப்பை அளிக்கும் செய்தியை அனைவருக்கும் கொண்டு செல்வதில் ஈடுபடவேண்டும்.

**6 ஜனவரி 2025, திங்கள்**

## நமது தேவனின் தியோஃபனி பண்டிகை (டென்ஹோ)

**வேத வாசிப்பு**

| | | | |
|---|---|---|---|
| ஏசாயா 12:1-6 | சங்கீதம் 29 | எபிரேயர் 10:15-25 | பரிசுத்த மத்தேயு 3:1-17 |

**நற்செய்தியின் கருப்பொருள்: அனைத்து சிருஷ்டிப்புகளையும் இயேசுவில் புதுப்பித்தல்**

*இந்த பண்டிகை எதைப் பற்றியது?*

யோர்தான் நதியில் பரிசுத்த யோவான் ஸ்நானன் மூலமாக கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதை குறிப்பிடுகின்றது.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

இயேசு யார் என்பதையும், இவர் என்னுடைய நேசக்குமாரன் என்று தேவன் பதிலளிப்பதை அறிகின்றோம், இயேசு உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டியாக வந்தார் என்றும் இயேசுவின் ஞானஸ்நானத்தின் மூலம் அனைத்து சிருஷ்டிப்புகளும் புதுப்பிக்கப்பட்டது என்றும் அறிகிறோம்

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. தண்ணீர் ஆசீர்வாதம்: விருந்தின் போது, குருவானவர் தண்ணீரை ஒரு பாத்திரத்திலோ அல்லது பெரிய அளவில் உள்ள கடல், ஆறு, ஏரி போன்ற தண்ணீர்களை ஆசீர்வதிப்பார். இப்படி ஆசீர்வதிக்கப்பட்ட தண்ணீரை பிறகு வீடுகளை பிரதிஷ்டை செய்ய பயன்படுத்தப்படும்.

2. நமது வீடுகளின் ஆசீர்வாதம்: ஆசீர்வதிக்கப்பட்ட தண்ணீரை குருவானவர் வீட்டையும், அதில் உள்ள பொருட்களையும், நம்மையும் சேர்த்து சுத்திகரிக்க பயன்படுத்துகிறார். இப்படி செய்வதின் மூலம் நாம் நமக்கும், திருச்சபைக்கும் உள்ள ஆவிக்குரிய தொடர்பை ஏற்படுத்துகிறோம்.

3. ஞானஸ்நானத்திலும் அதன் மூலமாக தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினராகி தண்ணீரால் சுத்திகரிக்கப்படுவதும், எண்ணெயினால் முத்திரிக்கப்படுவதுவும் பரிசுத்த ஆவியை குறிக்கிறது.





**12 ஜனவரி 2025** **தியோஃபனிக்கு பின்வரும் முதலாம் ஞாயிறு**

## 11-வது ஞாயிறு

**வேத வாசிப்பு**

| | | | |
|---|---|---|---|
| ஏசாயா 49:7-13 | சங்கீதம் 91 | எபேசியர் 1:3-14 | பரிசுத்த மத்தேயு 4:1-22 |

**நற்செய்தியின் கருப்பொருள்: சோதனைகளை மேற்கொள்ளுதல்**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

இந்த வேத பகுதியில் இயேசு வேத வசனத்தின் வல்லமையினால் பிசாசை தோற்கடிக்கிறார், பின்பு மனந்திரும்புங்கள் என்று மக்களை அழைப்பதின் மூலம் தனது பூமிக்குரிய ஊழியத்தை தொடங்குகிறார், தன்னைப் பின்பற்றும் படி தனது முதலாவது சீஷனை அழைக்கிறார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

இயேசுவைப் போலவே நாமும் சோதிக்கப்படுவோம், நம்முடைய விசுவாசமும் சோதிக்கப்படும். ஆனால் இயேசுவைப் போலவே நாமும் வேதத்தின் வல்லமையின் மூலம் ஜெயங்கொள்ள முடியும்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. பரிசுத்த வேதாகமத்தை படிப்பதும், கேட்பதும், தியானிப்பதும், மனப்பாடம் செய்வதும் நமது பழக்கமாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

2. சோதனைகள் வரும்போது கர்த்தருடைய வார்த்தைகளை நினைவில் கொண்டு அதை அறிக்கை செய்ய வேண்டும் பொல்லாங்கன் கொண்டு வருகிற சோதனைகளை மேற்கொள்ளத்தக்க வல்லமை வாய்ந்த கருவி பரிசுத்த வேத வசனமே.

3. வேத வசனங்கள் இயேசுவைப்போல ஞானமாயிருக்கவும், சாத்தானுடைய வஞ்சகத்திற்கு எதிர்த்து நிற்கவும் உதவுகிறது.

**19 ஜனவரி 2025** — **தியோபனிக்கு பின்வரும் இரண்டாம் ஞாயிறு**

**12-வது ஞாயிறு**

**வேத வாசிப்பு**

| ஏசாயா 51:1-8 | சங்கீதம் 139:1-6, 13-18 | எபிரெயர் 1:1-2; 2:1-4 | பரிசுத்த யோவான் 1:43-51 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள் : அவர் நம்மை அழைப்பதற்கு முன்பே நம்மை அறிந்திருக்கிறார்.**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

பிலிப்பு தனது நண்பரான (பர்தலமேயு என்ற) நாத்தான்வேலை எப்படி இயேவிடம் அழைத்து வருகிறார் என்பதை இந்த பகுதி விவரிக்கிறது

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

தேவன் நம்மை அழைப்பதற்கு முன்பே நம்மை அறிந்திருக்கிறார் - இயேசுவுக்குத் தெரிந்தது போலவே நாத்தான்வேலின் தூய்மையான இருதயமும் மற்றும் பிலிப்பு அழைத்து வருவதற்கு முன்பே அவர் இருந்த இடத்தையும் அவர் அறிந்திருந்தார்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. யார் எங்கிருந்து வந்தாலும், தேவனால் பயன்படுத்த முடியும். நாசரேத்தில் இருந்து நன்மை வரும் என்று யாரும் நம்பவில்லை.
2. 'வந்து பார்' என்று நாத்தான்வேலுக்கும் பிலிப்புவால் அழைப்பு கொடுக்கப்பட்டதுபோல நாம் அனைவரும் கிறிஸ்துவை தனிப்பட்ட முறையில் அறிவதற்கான அழைப்பு மிக அவசியம் ஆகும்.
3. பிலிப்பு தன் நண்பனை இயேசுவிடம் கொண்டு வந்தது போல், மக்களை இயேசுவிடம் கொண்டு வருவதற்கான தருணத்தை எதிர்நோக்கி காத்திருங்கள்





**26 ஜனவரி 2025** — **தியோஃபனிக்கு பின்வரும் மூன்றாம் ஞாயிறு**
**குருமார்களின் ஞாயிறு**-*சிறப்பு காணிக்கை*

**13-வது ஞாயிறு**

**வேத வாசிப்பு**

| எரேமியா 31:1-12 | சங்கீதம் 62:5-12 | 1 கொரிந்தியர் 3:16-4:5 | பரிசுத்த யோவான் 3:1-12 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள் : புதிய பிறப்பு**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

மீண்டும் பிறக்கிறது மூலம் தேவனுடைய ராஜ்யத்தில் நுழைவதற்கான வழியை நிக்கொதேமுக்கு இயேசு வெளிப்படுத்துகின்றார் இயேசு மேலும் கூறுகிறார்: மறுபடியும் பிறப்பது என்பது ஜலத்தினாலும் (ஞானஸ்நானம்) மற்றும் ஆவியினாலும் (பரிசுத்த ஆவியின் வரம்) பிறப்பது ஆகும்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கின்றோம்?*

புதிய பிறப்பு ஒரு ஆவிக்குரிய இரகசியம் ஆகும். இது நமது ஆரம்ப இரட்சிப்பின் பயணம், அதில் நாம் தண்ணீர் ஞானஸ்நானம் மூலமாக இயேசுவுடன் இணைந்துள்ளோம். (ரோமர் 6:1-10) மற்றும் அபிஷேகத்தின் மூலம் பரிசுத்த ஆவியைப் பெறுகிறோம். (கிறிஸ்மேஷன்).

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. ஞானஸ்நானம் என்பது தேவனுடைய ராஜ்யத்தில் நுழையவும் ,நமது ஆரம்ப இரட்சிப்பின் பயணமாக இருப்பதால், நாம் அனைவரும் வயது வித்தியாசம் இல்லாமல் ஞானஸ்நானம் பெற வேண்டும்.
2. மனந்திரும்புதலும், விசுவாசமும் தண்ணீர் ஞானஸ்நானத்துடன் இணைந்து இருக்க வேண்டும்.
3. தேவனுடைய ராஜ்யத்தின் ஒரு பகுதியாய் இருக்கிற நாம், தேவ பிள்ளைகளாக மாறி புதிய பிறப்பை அனுபவிக்க அழைப்பு விடுக்க அனைவரும் பொறுப்புள்ளவர்களாக இருக்கிறோம்.

**2 பிப்ரவரி 2025** **தியோபனி பின்வரும் நான்காம் ஞாயிறு**

**14-வது ஞாயிறு**

**கிறிஸ்துவை வெளிப்படுத்தும் பண்டிகை (மயல்தோ)**

| வேத வாசிப்பு | | | |
|---|---|---|---|
| ஏசாயா 11:1-10 | எபிரெயர் 7:7-17 | எபேசியர் 3:13-21 | பரிசுத்த லூக்கா 2:22-40 |

**நற்செய்தியின் கருப்பொருள்: தேவன் தமக்காகக் காத்திருப்போருக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார்.**

*இந்த பண்டிகை எதைப் பற்றியது?*

இந்த பண்டிகை இயேசுவின் பெற்றோர்கள் அவர் பிறந்து 40 நாட்களுக்குப் பின்னர் அவரை தேவாலயத்தில் ஆசாரியன் கையிலே யூத முறைமைகளை நிறைவேற்ற அர்ப்பணித்ததை ஞாபகப்படுத்துகிறது.

*இந்த பண்டிகையிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

நம்முடைய தேவன் பரிசுத்த சிமியோன், பரிசுத்த அன்னாள் போன்ற உண்மையான எதிர்பார்ப்போடு தமக்காக காத்திருக்கிறவர்களுக்கு தன்னை வெளிப்படுத்துகிறார் என்பதை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. யூத மதச் சட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் இயேசு முழுவதும் மனிதன் என்பதை நிரூபிக்கின்றார்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. சபையில் பெண்கள் பிரசவத்திற்கு பின்வரும் 40 நாட்களும் குழந்தையும் தாயினுடைய பாதுகாப்பிற்காக நன்றி செலுத்த ஆதி திருச்சபை, பெண்களை தேவாலயத்திற்கு வருமாறு கேட்டுக் கொண்டது.

2. புதிதாகப் பிறந்தவர்களும் (குழந்தைகள்), ஞானஸ்நானம் மற்றும் கிரிஸ்மேஷனுக்கு தயாராக உள்ளனர். அதே நேரத்தில் தேவாலயத்திற்குள் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகள் தேவனால் கொடுக்கப்பட்டவர்கள் என்று பகிரங்கமாக அறிவித்து தேவனுக்கு மகிமையை செலுத்துகிறார்கள்.

3. மெழுகுவர்த்திகளை வைத்திருப்பது - பரிசுத்த சிமியோனின் குறிப்பின் அடையாளமாக கிறிஸ்து புறஜாதிகளுக்கு வெளிச்சமா இருக்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறது, விசுவாசிகள் இந்த பண்டிகை நாளில் ஆராதனை ஒழுங்கு முறைகளின் போது ஏற்றப்பட்ட மெழுகுவர்த்திகளை வைத்திருப்பார்கள்.





**9 பிப்ரவரி 2025** **தியோபனி பின்வரும் ஐந்தாம் ஞாயிறு**

**15-வது ஞாயிறு**

| வேத வாசிப்பு | | | |
|---|---|---|---|
| ஏசாயா 41:8-20 | சங்கீதம் 131 | 2 கொரிந்தியர் 4:1-6 | பரிசுத்த மாற்கு 1:12-20 |

**நற்செய்தியின் கருப்பொருள்: இயேசுவின் அழைப்புக்கு செவிசாய்த்தல்**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

இந்தப் வேத பகுதி இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது. ராஜ்யத்தின் நற்செய்தியை அறிவித்து மனந்திரும்புதலுக்கு மக்களை அழைப்பதும் மேலும் அவரது முதல் சீடர்களை அவரைப் பின்பற்ற அழைப்பதை குறிப்பிடுகின்றது.

*இதை நாம் எவ்வாறு செயல்முறை படுத்தலாம்?*

தேவன் தனக்கு சீஷர்களாய் இருக்கும்படி சாதாரண படிப்பறிவற்றகளை தேர்வு செய்கிறார், அவர்கள் கிறிஸ்துவுக்கு செவி கொடுத்து அவரை பின்பற்றினபடியினால் அப்போஸ்தலர்கள் (எபேசியர் 2:20) என அழைக்கப்பட்டனர், திருச்சபை அவர்கள் மீது கட்டப்பட்டது, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் உலகத்தை மாற்றுகிறவர்களானார்கள். (அப்போஸ்தலர் 17:6).

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. மனந்திரும்புதல் என்பது இயேசுவுடனான நமது பயணத்தின் ஆரம்பம் மட்டுமல்ல, நம் வாழ்வில் தொடர்ச்சியாக நடைபெறக்கூடிய ஒன்றாகும்.

2. எல்லாவற்றையும் விட்டுவிட்டு, இயேசுவின் அழைப்புக்கு பதிலளிக்கவும், அவரை பின்பற்றவும் நாம் தயாராக வேண்டும்.

3. அவருடைய வல்லமையான காரியங்களைச் செய்ய தேவன் பெரும்பாலும் சாதாரண மக்களையே பயன்படுத்துகின்றார்.

**16 பிப்ரவரி 2025**

**16-வது ஞாயிறு**

**கடந்து சென்ற அனைத்து குருமார்கள் ஞாயிறு**

**வேத வாசிப்பு**

| | | | |
|---|---|---|---|
| உபாகமம் 34:1-8 | சங்கீதம் 90 | 1 தெசலோனிக்கேயர் 4:13-5:11 | பரிசுத்த மத்தேயு 24:42-51 |

**நற்செய்தியின் கருப்பொருள் : எஜமானுடைய வருகை**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

ஒரு எஜமானன் தன் வேலைக்காரனை தன் வீட்டு அனைத்திற்கும் பொறுப்பாளியாக்கி விட்டுப் பயணம் போகிறான். எஜமான் பின்னர் எதிர்பாராத நேரத்தில் திரும்புகிறார். பின் வேலைக்காரகர்களுக்கு அவர்களின் விசுவாசத்திற்கும், நேர்மைக்கும் ஏற்ப வெகுமதிகளை வழங்குகிறார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

இந்த உவமை நமக்கு ஒரு எச்சரிக்கை - நாம் எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும். நமது எஜமானரான இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமா இருக்க வேண்டும். அவருடைய தாமதமான வருகை நம்மை பொறுப்பற்றவர்களாயும் தீமை செய்கிறவர்களாய் மாற்றிவிடாமல் உண்மையும் புத்தியும் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. இயேசு இன்று திரும்பி வருவார் என்ற மனதுடன் ஒவ்வொரு நாளும் வாழுங்கள்.

2. வேலைக்காரன் உண்மையுள்ளவனாகவும் தன்னிடம் ஒப்படைக்கப் பட்டதற்கு பொறுப்புள்ளவர்களாகவும் இருக்கும்படி அழைக்கப்படுகிறான்.

3. சோம்பேறியாக இருப்பது, சோதிக்கப்படும்போது, தனக்கு ஒப்புக் கொடுத்ததில் உண்மையும் ஜாக்கிரதை உள்ளவர்களாக இருந்தால் நமக்காக காத்திருக்கிற வெகுமதிகளை பெற முடியும் என நினைவு கூற வேண்டும்,





**23 பிப்ரவரி 2025** **பெரிய தவக்காலம் தொடங்குவதற்கு முந்தைய ஞாயிறு**

**17-வது ஞாயிறு**

**நம்மை விட்டு கடந்து சென்ற விசுவாசிகள்**

**வேத வாசிப்பு**

| | | | |
|---|---|---|---|
| ஏசாயா 38:10-20 | சங்கீதம் 111 | 1 கொரிந்தியர் 15:20-28 | பரிசுத்த லூக்கா 12:32-48 |

**நற்செய்தியின் கருப்பொருள்: நமக்குக் ஒப்புக்கொடுக்கப் பட்டதில் உண்மையாக இருங்கள்**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

எஜமான் தங்கள் கல்யாணத்திலிருந்து வந்து தட்டும் போது உடனே திறக்க காத்துக் கொண்டிருக்கிற ஊழியக்காரனைக் குறித்தும், இரவின் ஜாமத்தில் வந்தாலும் ஏற்றுக்கொள்ள தக்கதாக விழித்திருக்கிற ஊழியக்காரனாகவும் இருப்பதை கூறுகின்றது.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

நமது எஜமானன் எதிர்பாராத நேரத்தில் திரும்பி வரும்போது அவர் நமக்கு ஒப்புக்கொடுத்ததில் உண்மை உள்ளவர்களாக இருக்க காண்பாரா, அல்லது அதற்கு எதிர்மறையாக இருக்க காண்பாரா? என்பதில் நம்மை நாமே சோதித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய அரைகள் கட்டப்பட்டதாகவும் விளக்கு எரிய கூடியதாகவும் இருக்க வேண்டும் (பரிசுத்த லூக்கா 12:35).

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. மற்றவர்கள் அலைந்து தேடுவது போல இயேசுவின் வருகையின் சரியான நாள் எது என்று தேடி அலைய வேண்டாம். அந்த நாளும் நாழிகையும் தேவன் ஒருவரே அறிந்திருக்கிறார். (பரிசுத்த மாற்கு 13:32).

2. நமது எஜமானன் நம் ஒவ்வொருவருக்கும் பொறுப்புகளை வழங்கியுள்ளார் - ஒரு பெற்றோராக, கணவனாக/மனைவியாக, குழந்தையாக, தொழிலாளியாக, குருவானவராக. அந்தந்த கடமைகளில் உண்மையாக இருந்து நிறைவேற்ற வேண்டும்.

3. நம்முடைய எஜமான் யார் என்று அறிந்த நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், நமது எஜமானனின் விருப்பம் என்னவென்று அறிந்தும் அதை செய்யாமல் இருந்தால் அதன் தண்டனையானது நமக்கு அதிகமாக இருக்கும்.

## பெரிய தவக்காலத்தின் தொடக்கம்

**2 மார்ச் 2025** **பெரிய தவக்காலத்தின் முதலாம் ஞாயிறு**

**18-வது ஞாயிறு**

**வேத வாசிப்பு**

| | | | |
|---|---|---|---|
| ஏசாயா 58:5-14 | சங்கீதம் 50:1-6 | கொலோசெயர் 3:1-17 | பரிசுத்த யோவான் 2:1-11 |

**நற்செய்தியின் கருப்பொருள்:**
**இயேசு துக்கத்தை சந்தோஷமாக மாற்றுகிறார்.**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

அவருடைய சீஷர்களும், தாயும் கூட அழைக்கப்பட்ட ஒரு திருமணம், இயேசு தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றுகிறார், அநேகர் அவர் மீது விசுவாசம் வைக்கின்றனர்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

நம் வாழ்வில் எதிர்பாராத விஷயங்கள் நடந்தாலும் இயேசுவால் அற்புதம் செய்ய முடியும், நம்முடைய சூழலை மகிழ்ச்சிகரமானதாக அவரால் மாற்ற முடியும்.பொதுவாக, நல்ல திராட்சைரசம் தயாரிக்க பல ஆண்டுகள் ஆகும், ஆனால் இயேசுவுக்கு தண்ணீரை திராட்சைரசமாக மாற்றுவதற்கு ஒரு நொடியே போதுமானதாக இருந்தது.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. எதிர்பாராத துன்பம் மற்றும் துக்கத்தின் தருணங்களில், ஒரு அற்புதம் நடக்கும் படி இயேசுவை நம்புங்கள்.

2. நம் வாழ்வில் மகிழ்ச்சியை திரும்ப மீட்டெடுக்க இயேசுவை நம்புங்கள்.

3. அற்புதங்கள் நம்மை இயேசுவிவிடம் கொண்டு சென்று, அவரை நம்புவதற்கு உதவுகின்றன.





**9 மார்ச் 2025** **பெரிய தவக்காலத்திற்கு பின்வரும் இரண்டாம் ஞாயிறு (தொழுநோயாளியைக் குணப்படுத்துதல்)**

**19-வது ஞாயிறு**

**வேத வாசிப்பு**

| | | | |
|---|---|---|---|
| 2 இராஜாக்கள் 5:1-14 | சங்கீதம் 51:1-17 | ரோமர் 3:27-4:5 | பரிசுத்த லூக்கா 4:40-41, 5:12-16 |

**நற்செய்தியின் கருப்பொருள்:**
**இயேசு புறக்கணிக்கபட்டவர்களை சேர்த்துக்கொள்கிறார்.**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

இங்கே இயேசு ஒரு தொழுநோயாளியைக் குணப்படுத்துகிறார், பின்னர் அவர் ஒரு வல்லமையான சாட்சியாக மாறுகின்றார் திரளான மக்கள் இயேசுவுக்கு செவிகொடுக்கவும் அவரால் குணமடையவும் வருகிறார்கள்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

இயேசு எல்லோரையும் அன்போடு அழைத்து சேர்த்துக்கொள்கிறார்; குறிப்பாக சமூதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட தொழு நோயாளியை இயேசு தொட்டு சுகமாக்குகிறதை காண்கிறோம், இது தேவன் எல்லார் மேலும் வைத்துள்ள அன்பையும் அக்கறையையும் காட்டுகிறது.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களைத் தேடுங்கள் - ஏழைகள், விதவைகள், தொழுநோயாளிகள், வீடற்றவர்கள் மற்றும் புறக்கணிக்கபட்டவர்கள்; அவர்களை நாம் இயேசுவின் அன்பைக் கொண்டு அரவணைப்போம்.

2. தேவன் நமக்கு செய்தவைகளுக்காக ஜீவனுள்ள சாட்சியாக எழும்புவோம்.

3. நாம் மற்றவர்களுக்கு சேவை செய்யும்போது, நாம் அவர்களுக்கு 'இயேசுவாக' மாறுகிறோம்.

**16 மார்ச் 2025** **பெரிய தவக்காலத்திற்கு பின்வரும் மூன்றாம் ஞாயிறு (திமிர்வாதக்காரனை குணப்படுத்துதல்)**

**20-வது ஞாயிறு**

**வேத வாசிப்பு**

| 2 இராஜாக்கள் 2:1-11 | சங்கீதம் 22:23-31 | ரோமர் 5:1-11 | பரிசுத்த மாற்கு 2:1-12 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள்: இயேசு நம்முடைய பாவங்களை மன்னித்து சரீரத்தை குணப்படுத்துகிறார்.**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

நான்கு நண்பர்கள் ஒரு திமிர்வாதக்காரனை இயேசுவிடம் கொண்டு வருகிறார்கள். இயேசு அவனது பாவங்களை மன்னிக்கிறார் மற்றும் குணப்படுத்துகிறார். இந்த அற்புதத்தினால் அநேகர் ஆச்சரியப்படுகிறார்கள், அதே வேளையில் இயேசு எப்படி பாவங்களை மன்னிக்கக்கூடும் என்றும் பலர் ஆச்சரியபட்டார்கள்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

தனிப்பட்ட விசுவாசமாக இருந்தாலும் சரி, மற்றவர்களுக்காக நீங்கள் விசுவாசம் வைத்தாலும் சரி தேவனிடமிருந்து சுகத்தையும், இரட்சிப்பையும் பெறுவதற்கு விசுவாசமே முக்கியம். கிறிஸ்து நம் சரீரத்தை குணப்படுத்து வதற்காக மட்டுமல்ல, நம் பாவங்களை மன்னிப்பதற்காகவும், நம் ஆத்துமாவை குணமாக்கவுமே இந்த உலகத்திற்கு வந்தார்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. திமிர்வாதக்காரனின் நான்கு நண்பர்கள் பல தடைகளை வென்று அவனை இயேசுவிடம் கொண்டுவந்தது போல, நாமும் மற்றவர்களை கிறிஸ்துவிடம் கொண்டுவர நம்மால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும்.

2. மற்றவர்கள் இரட்சிக்கப்படவும், ஆரோக்கியம் அடையவும், நாம் அவர்களுக்காக நம்பிக்கை கொண்டு இயேசுவை விசுவாசிக்க வேண்டும்.

3. தேவனுடைய குணப்படுத்தும் செயல் ஆவி, ஆத்மா, சரீரம் ஆகிய மூன்றையும் உள்ளடக்கியது.





**23 மார்ச் 2025** **பெரிய தவக்காலத்திற்கு பின்வரும் நான்காம் ஞாயிறு (கானானியப் பெண்ணைக் குணப்படுத்துதல்)**

**21-வது ஞாயிறு**

**வேத வாசிப்பு**

| ஏசாயா 56:1-7 | சங்கீதம் 19 | ரோமர் 7:14 -25 | பரிசுத்த மத்தேயு 15:21-28 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள்: சிறந்த விசுவாசத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

அசுத்த ஆவிகளால் துன்புறுத்தப்பட்ட மகளின் தாய் தன் மகள், சுகம் மற்றும் இரக்கம் பெற இயேசுவிடம் வருகிறாள். இயேசுவின் குணமாக்கும் வல்லமையில், அவளுக்கு இருக்கும் ஆழமான விசுவாசத்தைக் கண்டு, இயேசு பாராட்டுகிறார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

நம்முடைய விசுவாசத்தில் தேவன் எப்போதும் பிரியமாயிருக்கிறார் (எபி. 11:6). நாம் விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் அவரை அணுகும் போது, அவர் ஒருபோதும் நம் ஜெபங்களை கேட்காமல் விட்டுவிடமாட்டார், நம் மீது இரக்கம் காட்டுவார்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. நம்முடைய ஜெபங்களுக்கு பதில் கிடைக்காவிட்டால், நாம் நம்பிக்கை இழந்துவிடகூடாது. மாறாக அந்த தாயாரைப்போல, நாம் விடாமுயற்சி யுடன் இருக்க வேண்டும்.

2. நம் அன்புக்குரியவர்களுக்காக இயேசுவை நம்புங்கள், அவர் அவர்கள் மீது இரக்கம் காட்டுவார்.

3. ஜெபியுங்கள், உங்கள் விசுவாசத்தை வளர்த்துக்கொள்ளுங்கள், அதனால் நீங்கள் எந்த சூழலையும் பொருட்படுத்தாமல் விசுவாசிக் கலாம்.

## 25 மார்ச் 2025, செவ்வாய்

## தியோடோகோஸின் அறிவிப்பின் பண்டிகை
(சுபோரோ)

| வேத வாசிப்பு | | | |
|---|---|---|---|
| ஆதியாகமம் 28:10-22 | சங்கீதம் 40:5-10 | எபிரேயர் 2:11-18 | பரிசுத்த லூக்கா 1:24-38 |

**நற்செய்தியின் கருப்பொருள்: கீழ்ப்படியும் உணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள்**

*இந்த பண்டிகை எதைப் பற்றியது?*

கபிரியேல் தூதன் கன்னி மரியாளிடத்தில் கிறிஸ்துவின் பிறப்பை அறிவித்ததை கொண்டாடும் பண்டிகை. உலகத்தின் இரட்சிப்பிற்காக தன் குமாரனை அனுப்பும் வாக்குத்தத்தங்கள் நிறைவேறுதலின் ஆரம்பம் இது ஆகும்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

இரட்சிப்பு தேவனுடையது. மனிதனின் இரட்சிப்பிற்காக அவர் எடுத்த மனித அவதாரம் தேவனுடைய திட்டமாக இருந்தது, அதே நேரத்தில் அன்னை மரியாள் அதை ஏற்றுக் கொள்வதன் மூலம் தேவ திட்டம் நிறைவேறுவதற்கு மனிதனுடைய செவிசாய்த்தல் மிக முக்கிய பங்களிக்கிறது.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. அன்னை மரியாள் நமக்கு முன்பாக காட்டிய அவரது முன்மாதிரியைப் பின்பற்றுங்கள், அவருடைய சித்தம் நமக்கு கடினமானதும், நடைமுறைக்கு ஒவ்வாததாக இருந்தாலும் கீழ்படிதலின் உணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள்.

2. தேவன் கூறியவைகளை தாழ்மையோடும், அர்ப்பணிப்போடும் ஏற்றுக்கொள்ளும் போது அது ஆசீர்வாதத்திற்கும் இரட்சிப்பிற்கும் வழி வகுக்கின்றது.

3. பூமியில் தேவனுடைய பணியில் தீவிரமாக பங்கேற்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம் - வார்த்தைகளிலும் செயல்களிலும் - தேவன் மனித ஒத்துழைப்போடு அவற்றை நிறைவேற்றுகிறார்.





## 30 மார்ச் 2025 — பெரிய தவக்காலத்திற்கு பின்பு வரும் ஐந்தாம் ஞாயிறு
*(பலவீனப்படுத்தும் ஆவியைக்கொண்ட பெண்ணை குணப்படுத்துதல்)*

**22-வது ஞாயிறு**

| வேத வாசிப்பு | | | |
|---|---|---|---|
| ஏசாயா 50:1-5 | சங்கீதம் 107:1-3, 17-22 | 1 பேதுரு 3:8-16 | பரிசுத்த லூக்கா 13:10-17 |

**நற்செய்தியின் கருப்பொருள்: நாம் இரக்கமுள்ளவர்களாக இருக்க விரும்பும் தேவன்.**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

இயேசு ஓய்வுநாளில் ஒரு பெண்ணை குணப்படுத்துகிறார். கோபத்துடன் ஜெப ஆலய தலைவன் பாரம்பரிய சட்டங்களை மீரியதாக கூறி இயேசுவை குற்றம்சாட்டுகிறான், இயேசுவோ அவனுடைய மாய்மாலத்தை வெளிப்படுத்துகின்றார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

சட்டங்களும், ஒழுங்குமுறைகளும் நன்றாக இருந்தாலும், அவை நம் கண்களைக் குருடாக்கக் கூடாது, மற்றும் நம்மைச் சுற்றியுள்ளவர்களின் உணர்வை உணரும் தன்மையற்றவனாக கூடாது, நமது எல்லா ஆவிக்குரிய நடவடிக்கைகளிலும் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. இந்த பெரிய தவக்காலங்களில் ஜெபம், உபவாசம் மற்றும் ஊழியம் செய்வது போன்ற ஆவிக்குரிய செயல்களை நடைமுறைப்படுத்துவது நமக்கு தாழ்மையை கொண்டு வரும், உங்களை கவனித்துப் பார்த்து இந்த ஆவிக்குரிய ஒழுக்கங்களும் மற்றவர்களுக்கு இரக்கம் காட்டுகின்றோமா என ஆராய்ந்து பாருங்கள். (பரி.மத்தேயு 12:7).

2. பரிசேயர்களைப் போல பெருமையும் சுயநீதியும் உடையவர்களாக இருக்க வேண்டாம், மாறாக ஆவிக்குரிய பெருமையிலிருந்து மனம் திரும்பி குழந்தைகளைப் போல மாற தேவனிடத்திலே கேளுங்கள் (பரி.மத்தேயு 18:3).

3. ஆவிக்குரிய ஒழுக்கங்களை பின்பற்ற இந்த பெரிய தவக்காலத்தில் திருச்சபையோடு இணைந்து இருங்கள்.

| 6 ஏப்ரல் 2025 | பெரிய தவக்காலத்தின் ஆறாம் ஞாயிறு (பார்வையற்ற மனிதனை குணப்படுத்துதல்) 23-வது ஞாயிறு | | |
|---|---|---|---|
| வேத வாசிப்பு | | | |
| உபாகமம் 25:13-16; 26:1-13 | சங்கீதம் 119:9-16 | எபேசியர் 5:1-14 | பரிசுத்த யோவான் 9:1-41 |

**நற்செய்தியின் கருப்பொருள்: பார்வையைக் கொடுப்பது**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

பிறவியிலேயே பார்வையற்ற ஒருவரை இயேசு குணப்படுத்துகிறார். அவனோ தேவன் தனக்கு செய்ததை நம்பிக்கையற்ற பரிசேயர்களுக்கு சாட்சியளிக்கிறார், இறுதியில் இயேசு தன்னை அவர்களுக்கு வெளிப் படுத்துகிறார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

ஒருவரின் துன்பத்திற்கும் வியாதிக்கும், அவரின் சொந்த பாவமோ அல்லது பெற்றோரின் பாவமோ காரணம் இல்லை. இந்த 'ஆக்கபூர்வ' அற்புதத்தின் மூலம் இயேசு மெய்யாகவே தேவன் என்று இந்த குணமடைந்த மனிதரிடமிருந்து நாம் ஒரு பயனுள்ள கிறிஸ்தவ சாட்சியாக எவ்வாறு வாழ்வது எனக் கற்றுக்கொள்ள வேண்டும்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. இயேசுவைப் பற்றிய நாம் சாட்சி பகிரும்போது துன்பங்களையும் எதிர்ப்புகளையும் பெறலாம்.
2. ஒவ்வொரு சூழ்நிலையிலும் தைரியமாகவும், தளராமலும், தன்னம்பிக்கையோடு இயேசுவுக்காக நிற்க ஜெபியுங்கள்.
3. இருப்பினும், தேவன் நமக்கு செய்தவைகளை நாம் பகிர்ந்து கொள்ளும்போது உண்மையில் இயேசு யார் என்பதை மற்றவர்கள் அறிவார்கள்.





| 13 ஏப்ரல் 2025 | ஓசன்னா குருத்தோலை ஞாயிறு 24-வது ஞாயிறு குருத்தோலை ஞாயிறு பண்டிகை | | |
|---|---|---|---|
| வேத வாசிப்பு | | | |
| மீகா 4:1-5 | சங்கீதம் 118:1-2, 19-29 | ரோமர் 8:18-25 | பரிசுத்த யோவான் 12:12-19 |

**நற்செய்தியின் கருப்பொருள்: சேவகனாகிய ராஜா**

*இந்த பண்டிகை எதைப் பற்றியது?*

இயேசு ஒரு கழுதையின் மீது பெரும் கூட்டத்துடன் எருசலேமுக்குள் பவனியாக நுழைகிறார்,ஒரு ராஜாவைப் போல, குருத்தோலைகளுடன் ஓசன்னா என்று சத்தமிட்டு அவரை வரவேற்கிறார்கள்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

இயேசுவின் வாழ்க்கையின் கடைசி வாரமான பரிசுத்த வாரத்தில் நுழைவதற்கு சற்று முன்பு, மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்களை இயேசு இப்பூமியில் நிறைவேற்றுகிறார். ஜனங்கள் இயேசு தற்போதைய அரசாங்க சூழ்நிலையிலிருந்து காப்பாற்றுவார் என்று எதிர்பார்க்கிறார்கள், பூமிக்குரிய ராஜாவைப் போல் குதிரையில் ஏறாமல் கழுதையில் ஏறியதன் மூலம் அவர் நித்திய ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க வந்தார் என்பதை காண்பிக்கிறார்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. கிறிஸ்துவைப் போல மனத்தாழ்மையுடன் பிறருக்குச் சேவை செய்வோம். அவர் சொன்னதை செய்து காட்டினார் அவர் எல்லாரிலும் பெரியவராக இருந்தும் எல்லோருக்கும் சேவை செய்தார், அவர் நம்முடைய சேவகனாகிய ராஜா.
2. இப்போது நம்மை வரவேற்பவர்கள், நாளை நமக்கு எதிராக திரும்பும்போது ஆச்சரியப்பட வேண்டாம் இது நம்முடைய எஜமான் இயேசுவுக்கும் நடந்தது.
3. துன்பத்தின் மத்தியிலும் நம்முடைய விசுவாசத்தையும், நம்பிக்கையும் தற்போது கிடைக்கும் உலக மகிமையின் மீது அல்ல எதிர்கால மகிமையின் மீது வைக்க கற்றுக் கொள்ளுங்கள்.

**20 ஏப்ரல் 2025** **உயிர்த்தெழுந்த ஞாயிறு (கிம்தோ)**

**25-வது ஞாயிறு**

**ஈஸ்டர் பண்டிகை**

**வேத வாசிப்பு**

| அப்போஸ்தலர் 2:22-36 | சங்கீதம் 16 | 1 கொரிந்தியர் 15:1-19 | பரிசுத்த மத்தேயு 28:1-20 |
|---|---|---|---|

**நற்செய்தியின் ககருப்பொருள்: மரணத்தின் வீழ்ச்சி**

*இந்த பண்டிகை எதைப் பற்றியது?*

இயேசுவை எதிர்த்தவர்கள் அவருடைய உயிர்த்தெழுந்த உண்மையை மறைத்தபோதும் அவருடைய சீஷர்கள் மரணத்தை ஜெயித்த இயேசுவுக்கு சாட்சிகளாக மாறுகிறார்கள். பின்பு இயேசு தம் சீடர்களுக்கு பிரதான கட்டளையை கொடுக்கிறார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

ஈஸ்டர் (உயிர்த்தெழுதல்) என்பது வரலாற்றில் மிகப்பெரிய நிகழ்வு - ஏனெனில் இயேசு மரணத்தை ஜெயித்தார்! உயிர்த்தெழுதல் இல்லாமல் நம்முடைய விசுவாசம் வீண் (1 கொரிந்தியர் 15:14) மற்றும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நமக்கு உலகமெங்கும் தைரியத்துடன் செல்ல வைக்கிறது.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. நாம் இனி மரணத்திற்கு பயப்பட வேண்டியதில்லை, ஏனென்றால் இயேசு மரணத்தை ஜெயித்தார் என்ற விசுவாசம் நமக்கு உண்டு.

2. இந்த பண்டிகையின் நாட்களில் ஒருவருக்கொருவர்: கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்! அவர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தார்! என்று சொல்லுவோம்.

3. நம்மிடம் உள்ள இந்த விசுவாசத்தின் செய்தியை நாம் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.





**27 ஏப்ரல் 2025** **புதிய ஞாயிறு**

**வாலிபர் ஞாயிறு**-*சிறப்பு காணிக்கை*

**26-வது ஞாயிறு**

**வேத வாசிப்பு**

| ஏசாயா 40:9-15 | சங்கீதம் 133 | 2 தீமோத்தேயு 2:1-13 | பரிசுத்த யோவான் 20:19-31 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள்: நமது பயம் மற்றும் சந்தேகங்களை மேற்கொள்தல்.**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

பயத்திலிருந்த சீஷர்களுக்கு உயிர்த்தெழுந்த இயேசு காட்சியளிக்கிறார். அவர் அவர்களுக்கு தம்முடைய சமாதானத்தை கொடுக்கிறார், பரிசுத்த ஆவியின் வாக்குறுதியையும், பாவங்களை மன்னிக்கும் வல்லமையையும் அவர்களுக்கு கொடுக்கிறார். அவர் இரண்டாவது முறையாகத் தோன்றி, என் ஆண்டவரே, என் தேவனே என்று அழைத்த பரித்த தோமாவின் சந்தேகங்களை தீர்த்து வைக்கிறார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் பிரசன்னம் நம்முடைய எல்லா பயங்களையும் போக்குகின்றது. இயேசு அவருடைய ஆசாரிய ஊழியத்தைத் தொடரும்படி அவருடைய சீஷர்களுக்குக் கட்டளையிடுகிறார். தோமாவின் சந்தேகங்கள் ஆழமான விசுவாச அறிக்கையாக மாறுகிறது.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. நாம் பயந்து போய் இருக்கிறோமா? உயிர்த்தெழுந்த கிறிஸ்து நம்மோடு இருக்கிறார் என்பதை நினைவில் வையுங்கள்! (பரிசுத்த மத்தேயு 28:20)

2. நாம் சந்தேகப்படகூடியவரா? நாம் அதை ஒப்புக்கொள்ளும்போது தேவன் அதைப் பயன்படுத்தி நம்மை ஒரு உண்மை நிலைக்கு அழைத்துச் செல்ல முடியும்.

3. பயந்திருக்கிறவர்களையும், சந்தேகப்படுகிறவர்களையும் புறக்கணிக்கவோ அல்லது தீர்ப்பளிக்கவோ வேண்டாம் . தேவன் அவற்றை மாற்றி, தம்முடைய சீஷர்களைப் போல மகிமைக்காகப் பயன்படுத்த முடியும்.

** சந்தேகம் கொண்ட பரிசுத்த தோமா, பின்னர் தேவனால் பயன்படுத்தப்பட்டார். இந்தியா உட்பட உலகின் பல பகுதிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை கொண்டு சென்றார், அவர் இரத்தசாட்சியாக மரித்தார்.*

| 4 மே 2025 | உயிர்ப்பின் ஞாயிறுக்கு பின்வரும் முதலாம் ஞாயிறு |
|---|---|

**27-வது ஞாயிறு**

**வேத வாசிப்பு**

| யோசுவா 6:9-21 | சங்கீதம் 4 | எபேசியர் 6:10-24 | பரிசுத்த யோவான் 21:1-14 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள்: நமது அழைப்பை ஒருபோதும் கைவிடக் கூடாது.**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

இராமுழுவதும் பிரயாசப்பட்டு வலைவீசி ஒரு மீனும் அகப்படாத போது, உயிர்த்தெழுந்த கிறிஸ்து தனது சீஷர்களை ஒரு அதிசயமான மீன் பிடிப்பிற்கு நேராக வழிநடத்துகிறார் மற்றும் தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

இந்த அற்புதம் இயேசு, சீஷர்களுக்கு முதலாவது அவர்களை அழைத்தபோது செய்த அற்புதத்தை நினைவூட்டுகிறது (பரி. லூக்கா 5:1-11). மனுஷனைப் பிடிப்பவர்களாக்குவேன் (பரிசுத்த மத்தேயு 4:19). திரளான மீன்களை பிடிப்பது சீஷர்கள் தேவனின் ராஜ்யத்திற்கு மக்களைத் திரளாக கொண்டு வருவதற்கு உவமையாக இருக்கிறது.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. உங்கள் அழைப்பிலிருந்து நீங்கள் விலகிச் செல்ல ஆசைப்பட்டால், இயேசு நம்மையும், மனிதர்களைப் பிடிக்கும் மீனவர்களாக இருக்க அழைத்தார் என்ற நமது அழைப்பை நினைவூட்டுகிறார்.

2. அவருடைய சீஷர்களான நம் மூலமாகத்தான் மனித சமுதாயத்தில் உள்ள அனைவரும் இயேசுவைப் பற்றி அறிந்து கொள்ள முடியும்.

3. கிறிஸ்துவின் அழைப்பிலிருந்து பின்மாற்றம் அடைந்தவர்களுக்காக ஜெபியுங்கள்; அப்போது அவர்கள் தேவனுடைய அன்பிற்கும் அழைப்பிற்கும் திரும்பி வருவார்கள்.





| 11 மே 2025 | உயிர்ப்பின் ஞாயிறுக்கு பின்வரும் இரண்டாம் ஞாயிறு |
|---|---|

**28-வது ஞாயிறு**

**வேத வாசிப்பு**

| அப்போஸ்தலர் 4:8-21 | சங்கீதம் 100 | எபிரேயர் 3:1-13 | பரிசுத்த யோவான் 21:15-22 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள்: இயேசு நம்மை புதுப்பிக்கின்றார்**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

மூன்று முறை தன்னை மறுதலித்த பரிசுத்த பேதுருவை இயேசு மீட்டெடுக்கிறார் (பரிசுத்த லூக்கா 22:31) மற்றும் எதிர்காலத்தில் அவர் எப்படித் தன் உயிரை எஜமானாகிய தனக்கு கொடுப்பார் என்பதைப் பற்றியும் தீர்க்கதரிசனம் கூறுகிறார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

இயேசு எல்லோரையும் மீட்டெடுக்க முற்படுகின்றார்; அவரை மறுதலித்த பரி.பேதுருவுக்கு கூட மிக உயர்ந்த பொறுப்பை கொடுக்கின்றார். அதாவது தனது ஆடுகளை மேய்த்து, தன் உயிரைக்கூட கொடுக்க ஆயத்தமாக்க பரிசுத்த பேதுருவை மாற்றினார். இயேசுவின் அன்பு யாரையும் மாற்றும்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. இயேசுவின் அன்பிற்கு புறம்பானவர்கள் யாரும் இல்லை.

2. நாம் மனந்திரும்பி அவருடைய அன்பை ஏற்றுக்கொண்டால் இயேசு நம்மை மீண்டும் அவருடைய சீஷர்களின் சமூகத்திற்கு மீட்டெடுப்பார்.

3. நாம் நமது மரணத்திலும் இயேசுவின் உண்மையுள்ள சாட்சியாக இருக்க வேண்டும் என்று பிரயாசப்பட்டு ஊக்கமாக ஜெபியுங்கள்.

| 18 மே 2025 | உயிர்ப்பின் ஞாயிறுக்கு பின்வரும் மூன்றாம் ஞாயிறு | | |
|---|---|---|---|
| 29-வது ஞாயிறு | | | |
| வேத வாசிப்பு | | | |
| யாத்திராகமம் 34:4-12 | சங்கீதம் 22:25-31 | 1 யோவான் 5:13-21 | பரிசுத்த லூக்கா 24:13-35 |

**நற்செய்தியின் கருப்பொருள்: வேதமும், பரிசுத்த திருவிருந்தும், இயேசுவை அதிகமாக தெரிந்துகொள்ள நம் கண்களைத் திறக்கிறது.**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

எம்மாவூருக்கு செல்லும் வழியில் இரண்டு சீஷர்களுடன் இயேசு நடந்து செல்கிறார். அவர் முதலில் மேசியாவைப் பற்றிய வேதவசனங்களை விளக்குகிறார். பின்னர் அவர் அவர்களுடன் அப்பம் பிட்டு, அவர்களுக்குத் தன்னை வெளிப்படுத்துகிறார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

பரிசுத்த வேதாகமத்தை நாம் படிக்கும்போதும், கேட்கும்போதும், சரியாகப் போதிக்கும்போதும், அது நம்மைக் கண்டித்து கிறிஸ்துவிடம் நம்மை கொண்டு சேர்க்கும். பரிசுத்த திருவிருந்தில் (அப்பம் பிட்குதல்), பங்குபெறும் போது இயேசுவைக் காணும்படி நம்முடைய கண்கள் திறக்கப்படுகின்றது.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. பரிசுத்த வேதாகமத்தைப் படிப்பதும், கேட்பதும், கற்றுக்கொள்வதும் நமது பழக்கமாக இருக்க வேண்டும்.

2. நாம் சோர்வடையும் போது அல்லது குழப்பமடையும்போது, இந்த இரண்டு சீஷர்களைப் போல- நாம் சோர்வுற்று, கலங்கி நிற்க வேண்டாம், பரிசுத்த வேதாகமத்தை வாசித்துக் கைக்கொள்ள வேண்டும். அது நம்மை உணர்த்தி இயேசுவிடம் கொண்டு சேர்க்கும்.

3. நாம் தவறாமல் பரிசுத்த திருவிருந்தில் பங்கு கொள்ள வேண்டும். அதன் மூலம் இயேசுவைக் காண நம் இதயத்தின் கண்கள் திறக்கப்படும் மேலும் அவருடைய தெய்வீக சுபாவத்தில் பங்குகொள்ள உதவும். (2 பேதுரு 1:4).





| 25 மே 2025 | உயிர்ப்பின் ஞாயிறுக்கு பின்வரும் நான்காம் ஞாயிறு | | |
|---|---|---|---|
| 30-வது ஞாயிறு | | | |
| வேத வாசிப்பு | | | |
| ஏசாயா 54:1-8 | சங்கீதம் 98 | 1 பேதுரு 3:17-22 | பரிசுத்த லூக்கா 9:51-62 |

**நற்செய்தியின் கருப்பொருள்: இயேசுவின் சீஷராக இருப்பதற்கான கிரயம்**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

இயேசு தன்னை எருசலேமுக்குச் சென்று பாடுகளை அனுபவிக்க ஒப்புகொடுப்பதில் உறுதியாக இருந்தாலும், மூன்று நபர்கள் அவரை பின்பற்றுவதற்கு தங்கள் விருப்பத்தை தெரிவிப்பதும், இயேசு தன்னை பின்பற்றுவதற்கு என்ன கிரயம் செலுத்த வேண்டுமென்று அவர்களுக்கு கூறினார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

நாம் இயேசுவைப் பின்பற்ற விரும்பினாலும், பெரும்பாலும் அதற்குச் செலுத்த வேண்டிய கிரயத்தை குறித்து நாம் சிந்திப்பது இல்லை. ஆனால் இங்கே இயேசு நாம் இதற்கான ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று சவால் விடுகிறார், செலுத்த வேண்டிய கிரயத்தை எண்ணி அவரைப் பின்பற்ற உறுதியான விசுவாசத்தோடு அவரைப் பின்பற்ற வேண்டும் என கூறுகிறார்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. பூமிக்குரிய பாதுகாப்பைப் பற்றி நாம் நினைத்தால், நாம் இயேசுவை முழுமனதோடு பின்பற்ற முடியாது [vs. 58].

2. கிறிஸ்துவுக்கான நமது அற்பணிப்பை நிறைவேற்றுவதில் எதுவுமே நமக்குத் தடையாக இருக்கக்கூடாது. இதில் நமது பெற்றோர்களும்கூட அடங்கும். [vs. 59].

3. நாம் பின்மாற்றம் அடையாமல், மாறாக தாமதமின்றி முன்னோக்கிச் செல்ல வேண்டும் [vs. 61].

## 29 மே 2025, வியாழன்

## நம்முடைய கர்த்தரின் பரமேறியப் பண்டிகை

| வேத வாசிப்பு | | | |
|---|---|---|---|
| அப்போஸ்தலர் 1:1-11 | சங்கீதம் 47 | எபேசியர் 1:15-23 | பரிசுத்த லூக்கா 24:36-53 |

**நற்செய்தியின் கருப்பொருள்: கிறிஸ்து எப்படி பரமேறினாரோ அப்படியே மீண்டும் வருவார்**

*இந்த பண்டிகை எதைப் பற்றியது?*

இது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரமேறியதை நினைவுகூறும் பண்டிகையாகும், உயிர்த்தெழுந்த பின் தம்முடைய சீஷர்களுக்கு 40 நாட்கள் காட்சியளித்த பின் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

இது நம்பிக்கையின் பண்டிகை - இயேசு உயிர்த்தெழுந்து பரலோகம் சென்றதால், நாம் மரணத்தை நம்பிக்கையுடன் பரலோகத்தின் வாசலாக பார்க்கிறோம்.

மகிழ்ச்சியின் பண்டிகை - ஏனென்றால் இயேசு நமக்குள்ளே வாசம்பண்ணவும், சத்தியத்திற்குள்ளும், ஜீவனுக்குள்ளும் வழிநடத்தவும் பரிசுத்த ஆவியை அனுப்பினார்.

காத்திருப்பின் பண்டிகை - ஏனென்றால் இது இயேசுவின் இரண்டாம் வருகையை நமக்கு நினைவூட்டுகிறது. எனவே நாம் காத்திருந்து, நம்மை பரிசுத்தமும், தூய்மையாயும், வைத்திருக்கவும், அதனால் அவர் வரும் போது, அவருடைய வருகைக்காகக் காத்திருந்த உண்மையுள்ள ஊழியர்களாக அவர் நம்மைக் காணவேண்டும்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. இனி மரண பயம் தேவையில்லை!
2. நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் உண்மையான சாட்சியாக இருக்க நமக்கு அதிகாரம் அளிக்க பரிசுத்த ஆவியானவரிடம் ஜெபிப்போம்.
3. இயேசுவின் இரண்டாம் வருகைக்கு எப்போதும் ஆயத்தமாக இருப்போம்.





## 1 ஜுன் 2025 — பெந்தெகொஸ்தே நாளுக்கு முந்தைய ஞாயிறு

## 31-வது ஞாயிறு

| வேத வாசிப்பு | | | |
|---|---|---|---|
| யோசுவா 1:5-9 | சங்கீதம் 1 | 1 கொரிந்தியர் 7:1-2, 25-34, 9:1-10 | பரிசுத்த யோவான் 17:13-26 |

**நற்செய்தியின் கருப்பொருள்: ஒரு மனதிற்கான ஜெபம்**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

இயேசு கைது செய்யப்பட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுவதற்கு சற்று முன்பு, அவர் தனியாக பிதாவிடம் ஜெபிக்கின்றார் - முதலில் அவருடைய சீஷர்களுக்காகவும் பின்பு சீஷர்கள் மூலம் அவரை விசுவாசிக்க போகிறவர்களுக்காகவும் ஜெபிக்கின்றார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

கிறிஸ்தவர்களாகிய நாம் இவ்வுலகில் வாழ்ந்தாலும், நாம் இவ்வுலகிற்கு சொந்தமானவர்கள் அல்ல. இயேசுவின் மிகப் பெரிய ஜெபம், 'நாம் அனைவரும் ஒன்றாக இருப்போம்' - அதாவது. விசுவாசிகளிடையே உண்மையான ஒற்றுமை இருக்க வேண்டும் ; ஏனென்றால் அதுவே மற்றவர்கள் இயேசுவை விசுவாசிப்பதற்கு வழிசெய்யும்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. உலகம் இயேசுவை அறிவதற்காகவே நாம் உலகிற்குள்ளே அனுப்பப்பட்டுள்ளோம் [vs. 18].
2. உலகம் நம்மை வெறுத்தாலும், தேவன் நம்மை பொல்லாதவனிடமிருந்து தப்புவிப்பார் [vs. 14,15].
3. நாம் ஒருவரோடு ஒருவர் ஐக்கியமாக இருக்க முயற்சி செய்ய வேண்டும்; அதுவே நாம் நம்மை அவருடையவர்களாக மாற்றி, மற்றவர்களை இயேசுவை அறிந்துகொள்ள உதவியாயும் இருக்கும் [vs. 21]

**8 ஜுன் 2025**

**பெந்தெகொஸ்தே நாள்**
**(ஈஸ்டருக்குப் பின்வரும் ஐம்பதாவது நாள்)**
**மிஷன்ஸ் ஞாயிறு**-*சிறப்பு காணிக்கை*
**32-வது ஞாயிறு**

**வேத வாசிப்பு**

| அப்போஸ்தலர் | சங்கீதம் | கலாத்தியர் | பரிசுத்த யோவான் |
|---|---|---|---|
| 2:1-21 | 104:24-34, 35, | 5:16-26 | 16:1-15 |

**நற்செய்தியின் கருப்பொருள்: பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவிசெய்கின்றவர்**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

இயேசு தம் சீஷர்களை நோக்கி நான் போய் என்றென்றைக்கும் உங்களோடு தங்கியிருக்கிற பரிசுத்த ஆவியானவரை அனுப்புகிறேன் அவர் என்றென்றைக்கும் உங்களுடனே தங்கியிப்பார் என்று கூறுகிறார். (பரிசுத்த யோவான் 14:16) மேலும் அவர் உங்களை சகல சத்தியத்திலும் வழிநடத்துவார் (பரி யோவான் 16:13).

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவிசெய்கின்றவர் - நமக்கு ஆறுதல் அளிப்பவர், ஆலோசனை கொடுப்பவர் மற்றும் வழிகாட்டுபவர். பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வாசம்பண்ணி தேவனை அறியச் செய்து, உலகத்தை கண்டித்து உணர்த்துவார்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. நாம் இயேசுவைப் பின்தொடரும்போது, துன்புறுத்தல்களை எதிர்பார்க்கலாம் [vs 1-3].

2. நாம் தனிமையில் இருப்பதை உணரும் போது, ஆறுதல் அளிப்பவரும், நமது துணையாளருமாகிய பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதும் நம்முடன் இருப்பதை நினைவு கூற வேண்டும் [vs 6,7].

3. உலகமுழுவதுக்கும் சத்தியதிற்கு வல்லமையான சாட்சியாக இருப்பதற்கு பரிசுத்த ஆவியானவர் நமக்கு அதிகாரம் அளிக்கிறார் (அப்போஸ்தலர் 2:11).





**15 ஜுன் 2025**

**பெந்தெகொஸ்தேக்கு பின்வரும் முதலாம் ஞாயிறு**
**33-வது ஞாயிறு**

**வேத வாசிப்பு**

| எரேமியா | அப்போஸ்தலர் | 2 கொரிந்தியர் | பரிசுத்த யோவான் |
|---|---|---|---|
| 29:10-16 | 17:10-15 | 5:14-6:10 | 6:26-35 |

**நற்செய்தியின் கருப்பொருள்: இயேசு ஜீவ அப்பம்**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

பெண்களும், குழந்தைகளும் தவிர ஐந்து அப்பங்களை கொண்டு, இயேசு 5000 பேருக்கு உணவளித்த பிறகு பலர் அவரைப் பின்தொடர்ந்தனர். இயேசு என்றென்றும் உள்ள ஜீவ அப்பத்திற்கு நேராக அவர்களை வழிநடத்துகிறார், அதாவது அவரே, அதை அறிவிக்கிறார். உலகத்திற்கு ஜீவனைக் கொடுக்கும் வானத்திலிருந்து இறங்கிய ஜீவஅப்பம் நானே என்று கூறுகின்றார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

அடையாளங்களை தேடாதீர்கள்; மாறாக இந்த அடையாளங்களைத் செய்த இயேசுவைத் தேடுங்கள் - அவரை நம்புங்கள், அவர் நமது ஆவிக்குரிய பசியையும், தாகத்தையும் தீர்ப்பார்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. நாம் ஆசீர்வாதங்களையும் அற்புதங்களையும் பெறும்போது, அனைத்து ஆசிர்வாதங்களின் ஆதாரமாய் இருக்கிற தேவனை மறந்துவிடாதீர்கள்.

2. இயேசுவைப் பின்பற்றி அவரை தேடுங்கள், ஏனென்றால் அவர் தான் நித்திய ஜீவனின் ஆதாரம்.

3. பரிசுத்த திருவிருந்தில் தவறாமல் பங்கு கொள்ளுங்கள், ஏனென்றால் அவர் பரிசுத்த திருவிருந்து மூலம் அவர் தம்மையே நமக்கு கொடுக்கிறார் (பரி. யோவான் 6:51, 53).

**22 ஜூன் 2025** **பெந்தெகொஸ்தேக்கு பின்வரும் இரண்டாம் ஞாயிறு**

**34-வது ஞாயிறு**

| வேத வாசிப்பு | | | |
|---|---|---|---|
| தானியேல் 6:25-28 | அப்போஸ்தலர் 4:23-31 | எபேசியர் 2:11-22 | பரிசுத்த மத்தேயு 10:5-16 |

**நற்செய்தியின் கருப்பொருள்: பிரசங்கிக்கவும் குணப்படுத்தவும் அனுப்பப்பட்டார்கள்.**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?* (பரிசுத்த லூக்கா 9:1-6)

தேவனுடைய ராஜ்யத்தைப் அறிவிக்க அவர் தம்முடைய சீஷர்களை, பிரசங்கிக்கவும் குணமாக்கவும் அவர் அனுப்பும்போது எதை எடுத்துச் செல்ல வேண்டும், எங்கு செல்ல வேண்டும், எப்படி செல்ல வேண்டும் என்று இயேசு தெளிவான அறிவுரைகளை வழங்குகிறார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

இயேசுவின் ஊழியமானது பிரசங்கித்து குணப்படுத்துவதாக இருந்தது. இது இப்போது அவருடைய சீஷர்களுக்கு பகிரப்பட்டுள்ளது, இந்த பணியில் ஒரே மனதுடன் 'செல்ல' வேண்டும் மற்றும் இயேசுவிடமிருந்து பெற்றதை இலவசமாக கொடுக்க வேண்டும்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. இயேசுவின் சீஷர்களாக, நாம் வார்த்தையிலும், செயலிலும் பிரசங்கிக்கவும் குணப்படுத்தவும் அழைக்கப்பட்டுள்ளோம்.

2. நாம் நமது சேவையில் கவனம் சிதறாமல் இருக்க வேண்டும். தேவைகள் அனைத்தையும் தேவன் பார்த்துக்கொள்வார்.

3. சமாதானத்தையும், மன்னிப்பையும் பெற்றுக்கொள்பவர்களுக்கு நாம் அதை எடுத்துச் செல்கிறோம்.





**29 ஜூன் 2025** **பெந்தெகொஸ்தேக்கு பின்வரும் மூன்றாவது ஞாயிறு**
**செமினரி ஞாயிறு-***சிறப்பு காணிக்கை*

**35-வது ஞாயிறு**

| வேத வாசிப்பு | | | |
|---|---|---|---|
| எரேமியா 3:1-5 | அப்போஸ்தலர் 13:26-39 | கலாத்தியர் 6:10-18 | பரிசுத்த யோவான் 6:35-46 |

**நற்செய்தியின் கருப்பொருள்: பிதாவின் சித்தத்தைச் செய்யவே அனுப்பப்பட்டார்.**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

இயேசு யார் என்று யூதர்கள் குழப்பத்தில் இருந்தனர். இந்த வேத பகுதியில் இயேசு மீண்டும் ஒருமுறை தன்னை பிதாவின் சித்தம் செய்ய வானத்திலிருந்து இறங்கிய அப்பம் என்று கூறுகிறார் பிதாவின் சித்தத்தைச் செய்ய, அவர் உண்மையில் யார் என்பது பற்றி யூதர்களை குழப்பத்தில் ஆழ்த்தினார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

இயேசு தெய்வீகமானவர் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம்; அவர் தேவனுடைய குமாரன் , ஜீவனைக் கொடுக்கும் படியாக பரலோகத்திலிருந்து அனுப்பபட்ட அப்பம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலமாக அனைவரும் நித்தியஜீவனை பெற வேண்டும் என்பதே பிதாவின் சித்தம் ஆகும்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. இயேசுவைப் போலவே, நாமும் பிதாவின் சித்தத்தைச் செய்ய நம் வாழ்வில் உள்ள நம் விருப்பங்களை அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

2. மற்றவர்களுக்கு இயேசுவைப் காட்டவும் அவரை விசுவாசிக்கவும் உதவ வேண்டும் - அவர்கள் நித்திய ஜீவனைப் பெற அதுதான் ஒரே வழி ஆகும்.

3. பரிசுத்த திருவிருந்தில் பங்கெடுப்பதன் மூலம் நித்திய ஜீவன் பலப் படுத்தப்பட்டு வளர்க்கப்படுகிறது, பரிசுத்த திருவிருந்தில் இயேசு கிறிஸ்து தன்னையே அப்பமாகவும், திராட்சை இரசமாகவும் ஒப்புக்கொடுக் கின்றார்.

| 6 ஜூலை 2025 | பெந்தெகொஸ்தேக்கு பின்வரும் நான்காம் ஞாயிறு |
|---|---|
| 36-வது ஞாயிறு | |

**வேத வாசிப்பு**

| ஏசாயா 65:8-12 | அப்போஸ்தலர் 6:1-7 | 1 கொரிந்தியர் 16:14-22 | பரிசுத்த லூக்கா 10:1-16 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள்: அறுவடை மற்றும் வேலையாட்களின் உண்மையான நிலவரம்.**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

இயேசு தம்முடைய 70 சீஷர்களை பிரசங்கிக்கவும் குணப்படுத்தவும் அனுப்புகிறார். ஆபத்தின் மத்தியிலும் அவர்கள் இந்த சேவையை எப்போதும் செய்ய வேண்டும் என்று இயேசு நினைவூட்டுகிறார், கிறிஸ்துவையும் அவருடைய கிரியைகளையும் நிராகரிப்பதால் ஏற்படும் ஆபத்தை குறித்து இயேசு எச்சரிக்கிறார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

அறுவடையோ மிகுதி என இயேசு கூறுகிறார் (இதன் அர்த்தம் உலகில் நற்செய்தியைக் கேட்பது மற்றும் பதிலளிப்பது). இந்தகைய தேவையில் உள்ளோர் மிகுதியாக இருக்கிறார்கள். அறுவடை மிகுதி வேலையாட்களோ கொஞ்சம், அறுவடைக்கு அர்ப்பணிப்புடன் ஆட்களை அனுப்பும்படி பிதாவினிடத்தில் வேண்டிகொள்ளுங்கள். இந்த தேவையில் ஓநாய்களுக்குள்ளே ஆடுகளை அனுப்புவதாக இயேசு கூறுகிறார்

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. கிறிஸ்துவின் பணியை நிறைவேற்ற அதிக வேலையாட்களை தேவன் எழுப்பும்படி தொடர்ந்து இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும்
2. எந்த எதிர்ப்புக்கும், துன்புறுத்தலுக்கு தயாராக இருக்க வேண்டும், எனவே சுவிசேஷம் அறிவிக்கும்போது மிகவும் ஞானமாக செயல்பட வேண்டும்.
3. நாம் தேவனின் மகத்தான செயல்களைக் கண்டு அனுபவிக்கிறவர்களாய் இருக்க வேண்டும். மனத்தாழ்மையுடன் இருக்கவும், மனந்திரும்பும், இருதயம் உள்ளவர்களாய் இருக்க ஞாபகத்தில் கொள்ள வேண்டும்





| 13 ஜூலை 2025 | பெந்தெகொஸ்தேக்கு பின்வரும் ஐந்தாம் ஞாயிறு |
|---|---|
| 37-வது ஞாயிறு | |

**வேத வாசிப்பு**

| ஏசாயா 40:27-31 | அப்போஸ்தலர் 9:10-18 | 2 கொரிந்தியர் 5:14-20 | பரிசுத்த லூக்கா 9:10-17 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள்: நம் குறைவுகளில் தேவ வல்லமை**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?* (பரி யோவான் 6:4-14)

நான்கு சுவிசேஷங்களிலும் சொல்லப்பட்ட பதிவு செய்யப்பட்ட இந்த அற்புதத்தில், ஐந்து அப்பம், இரண்டு மீன்களை கொண்டு இயேசு 5000 பேருக்கு உணவளிக்கிறார் (குழந்தைகள், பெண்கள் தவிர்த்து) மனித வரம்புகளுக்கு அப்பாற்பட்ட தேவனின் வல்லமை இங்கு வெளிப்படுத்தப் படுகின்றது.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

நமக்கு தேவைகள் அதிகமா இருந்தும் அதற்கான எந்த சூழ்நிலையில் இல்லாதபோது நம்மிடம் உள்ளதை இயேசுவிடம் கொடுக்க வேண்டும், அதைக் கொண்டு நம் தேவைகள் எல்லாம் சந்திக்க தேவன் வல்லவராய் இருக்கிறார்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. இயேசு தம்முடைய சீஷர்களை சோதித்தது போல் நம்மையும் சோதிப்பார் அவரை விசுவாசியுங்கள்.
2. ஒரு தேவையை எதிர்கொள்ளும் போது, கவலைப்படுவதை விட, அந்த தேவைகள் சந்திக்க பட தேவனை நம்புங்கள்.
3. மற்றவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தேவன் உங்களைப் பயன்படுத்தும் போது, அவர் உங்கள் தேவைகளையும் சந்திப்பார். அனைவரும் சாப்பிட்ட பின் சீஷர்களுக்காக 12 கூடைகள் மீதம் இருந்ததை நினைவில்கொள்ள வேண்டும்.

| 20 ஜுலை 2025 | பெந்தெகொஸ்தேக்கு பின்வரும் ஆறாம் ஞாயிறு | | |
|---|---|---|---|
| 38-வது ஞாயிறு | | | |
| வேத வாசிப்பு | | | |
| ஏசாயா 14:22-27 | அப்போஸ்தலர் 1:15-20 | 1 கொரிந்தியர் 8:1-6 | பரிசுத்த மத்தேயு 15:32-39 |

**நற்செய்தியின் கருப்பொருள்: தேவன் நம் சரீர தேவைகளை பூர்த்தி செய்ய வல்லவர்**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

திரளான மக்களுக்கு உணவளிக்கும் இந்த இரண்டாவது நிகழ்வில், இயேசு, மூன்று நாட்களாக அவர்கள் எதுவும் சாப்பிடவில்லை என்பதைக் கண்டு, ஏழு அப்பங்களைக் கொண்டு 4000 பேருக்கு உணவளித்தார் அதில் பெண்களும் பிள்ளைகளும் சேர்க்கப்படவில்லை.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

நம்முடைய ஆவிக்குரிய மற்றும் சரீர தேவைகள் குறித்தும் இயேசு அக்கறை கொண்டுள்ளார். சீஷர்கள் தங்களிடம் இருந்த சிறிதளவை இயேசுவிடம் கொடுத்தபோது, அது அவர்களின் அனைத்து தேவைகளை யும் பூர்த்தி செய்ய போதுமானதாய் இருந்தது.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. இயேசுவிடம் இருந்த அதே மனதுருக்க கண்களுடன் மக்களைக் காண வேண்டும் என்று ஜெபியுங்கள்.

2. தேவைகளைப் பூர்த்தி செய்ய நம்மிடம் சிறிதளவு மட்டுமே இருந்தால் சோர்வடைய வேண்டாம். அதை இயேசுவிடம் கொடுத்தால் அவர் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்ய கூடிய சந்திக்ககூடிய அளவு அதைப் பெருக பண்ண அவரால் கூடும்.

3. அவருடைய சீஷர்களாகிய நம் மூலமாகத்தான் இயேசு நம்மை சுற்றியுள்ள மற்றவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறார் நாம் அவரது சரீரத்தின் அவையங்களாய் இருக்கிறோம்.





| 27 ஜுலை 2025 | பெந்தெகொஸ்தேக்கு பின்வரும் ஏழாம் ஞாயிறு | | |
|---|---|---|---|
| 39-வது ஞாயிறு | | | |
| வேத வாசிப்பு | | | |
| ஏசாயா 57:15-19 | அப்போஸ்தலர் 4:32-37 | எபேசியர் 2:11-22 | பரிசுத்த மாற்கு 3:20-30 |

**நற்செய்தியின் ககருப்பொருள்: பொல்லாத ஆவிகள் மீது இயேசுவின் அதிகாரம்**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

இயேசு ஒரு பிசாசை துரத்தும்போது, அவர் அதைச் பிசாசின் வல்லமையால் செய்தார் என்று சிலர் கூறினார்கள். ஆனால் இயேசு கூறியது எப்படி சாத்தானின் ராஜ்ஜியம் தன்னைத்தானே அழித்துக் கொள்ள முடியும்? பலவான் காவல் காக்கும்போது அவனிலும் பலவான் வந்தால்தான் அவன் பொருளை கொள்ளையாட முடியும் (பரி. லூக்கா 11:21,22).

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

தேவ குமரனாகிய இயேசு, பிசாசின் வல்லமையில் அகப்பட்டவர்களை விடுவிக்கும்படி வந்தார். ஆனால் அப்படி அவர் செய்யும்போது அவருடைய நோக்கத்தையும், வல்லமையையும் அநேகர் சந்தேகித்தார்கள்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. சாத்தானின் வல்லமைக்கு நாம் பயப்படத் தேவையில்லை; இயேசு கிறிஸ்து அந்த அனைத்து வல்லமைகளையும் விட வலிமையானவர்.

2. பிசாசின் வல்லமையால் சிறைபிடிக்கப்பட்டவர்கள் இயேசுவின் நாமத்தில் விடுவிக்கப்பட ஜெபியுங்கள் .

3. தேவனுடைய செயலை சிலர் தவறாகப் புரிந்து கொள்ளும்போதும், கேள்வி கேட்கும்போதும், எதிர்க்கும்போதும் சோர்வடைய வேண்டாம்.

## 3 ஆகஸ்ட் 2025 பெந்தெகொஸ்தேக்கு பின்வரும் எட்டாம் ஞாயிறு

## 40-வது ஞாயிறு

| வேத வாசிப்பு | | | |
|---|---|---|---|
| ஏசாயா 52:1-6 | சங்கீதம் 23 | 1 பேதுரு 2:4-10 | பரிசுத்த யோவான் 6:47-59 |

**நற்செய்தியின் கருப்பொருள்: வாழ்வளிக்கும் இயேசுவின் சரீரமும், இரத்தமும்**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

இந்த வேத பகுதியில் இயேசு தெய்வீக திருவிருந்தின். அடிப்படைக் கொள்கையை நிறுவுகிறார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

இது ஒரு இரகசியம் பரிசுத்த திருவிருந்தில் நம் இயேசுவின், சரீரம் மற்றும் இரத்தத்தைப் பானம் செய்கிறோம். இது நம்மால் புரிந்துகொள்ள கடினமாக இருந்தாலும், அப்பமும், இரசமும் எப்போது ஆசீர்வதிக்கப்படுகிறதோ, அப்போது அவை பரிசுத்த சரீரமாக, இரத்தமாக மாறுகின்றன. விசுவாசத்தோடு பரிசுத்த திருவிருந்தில் பங்குகொள்ளும்போது, அது நம்மை ஆவிக்குரிய ரீதியில் புதுபித்து, நித்தியஜீவனைக் கொடுக்கிறது.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. பரிசுத்த திருவிருந்து திருச்சபையின் மையமாக உள்ளது. அது கிறிஸ்து நம்முடன், நம் மத்தியில் இருக்கிறார் என்பதை வெளிகாட்டுகிறது.

2. எனவே, இனி நாம் எதற்காகவும் பரிசுத்த திருவிருந்தில் இலகுவாகவோ அல்லது பங்கு பெறாமலோ இருக்க கூடாது.

3. நாம் வெளியே புறப்பட்டுச் சென்று, தேவனை அறியாது மரண வாசலை நோக்கிக் கொண்டிருப்பவர்களை இயேசுவிடம் அழைத்துச் செல்வோம். அவர்களும் இயேசுவின் சரீரம் மற்றும் இரத்ததில் பங்குபெற்று ஜீவனில் பங்கு பெறட்டும்.





## 6 ஆகஸ்ட் 2025, புதன்

## நம்முடைய கர்த்தரின் மறுரூப பண்டிகை

| வேத வாசிப்பு | | | |
|---|---|---|---|
| உபாகமம் 16:13-17 | சங்கீதம் 24 | 1 யோவான் 2:23-3:1 | பரிசுத்த லூக்கா 9:27-36 |

**நற்செய்தியின் கருப்பொருள்: கிறிஸ்துவின் சாயலாக மாற வேண்டும்.**

*இந்த பண்டிகை எதைப் பற்றியது?*

நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவரது சீஷர்களுக்கு அவரது தெய்வீகத்தன்மையை, வெளிப்படுத்தி மறுரூபமடைந்த அற்புதத்தை நினைவுகூரும் பண்டிகை ஆகும்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

இது இயேசுவின் தெய்வீக தன்மையையும் அவர் தேவனுடை நேசகுமாரன் என்பதையும் வெளிப்படுத்துகின்றது. மோசே (இறந்தவர்) தோன்றி இயேசுவிடம் பேசுவதைக் காண்கிறோம். இது மனிதர்களுக்கு மரணம் என்பது முடிவல்ல என்பதற்கான ஆதாரம், மற்றும் கிறிஸ்துவில் இறந்த பரிசுத்தவான்கள் தேவனோடு தொடர்ந்து ஐக்கியம் கொண்டிருக்கிறார்கள். மறுரூபமடைவது 'தியோசிஸ்' என்பதை நினைவூட்டுகிறது – தேவன் நம்மை இயேசு கிறிஸ்துவின் சாயலில் மாற்றுவதற்கு நம்மில் கிரியை செய்கிறார் அது பரிபூரணப்பட மனிதராகிய நாம் தேவனோடு ஐக்கியத்தில் இருக்க வேண்டும்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. பரிசுத்த சடங்காச்சாரங்களில் குறிப்பாக பரிசுத்த திருவிருந்தில் பங்கேற்பது, நமது சுபாவத்தை மாற்ற உதவுகிறது.

2. திருச்சபை கடைபிடிக்கும் ஜெபம், உபவாசம், சேவை செய்தல் போன்றவை நம்மை செம்மைபடுத்தி மறுரூபமடைய உதவுகிறது.

3. ஒரு நாள் தேவனை முகமுகமாக சந்திப்போம் என்ற நம்பிக்கையுடன் நம் வாழ்க்கையில் வரும் கஷ்டங்களை எதிர்கொள்வோம்.

## 10 ஆகஸ்ட் 2025 மறுரூப பண்டிகைக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு

### 41-வது ஞாயிறு

**வேத வாசிப்பு**

| உபாகமம் 25:13-16 | சங்கீதம் 27 | யாக்கோபு 4:7-5:6 | பரி.மத்தேயு 21:28-32 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள்:**
**தேவ சித்தத்தைச் செய்பவர்களாக இருங்கள்.**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

ஒரு மனிதனுக்கு இருந்த இரண்டு குமாரர்களைப் பற்றிய உவமை இது. இரண்டு குமாரர்களையும் தகப்பன், தன் திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்யுமாறு கூறுகிறார், ஆனால் அவர்கள் பதில் ஒன்றாகவும், செயல் வேறு ஒன்றாகவும் இருந்தது. இயேசு 'மூத்தவன்' என்ற பதத்தையும், உதாரணத்தையும் யூதர்களின் பிரதான ஆசாரியர்களின் மாய்மாலத்தை காட்ட பயன்படுத்துகிறார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

வெறுமனே ஏதாவது சொல்வது போதாது; மாறாக சரியான நேரத்தில் சரியாக செய்வதுதான் முக்கியம். மேலும் ஆவிக்குரிய பெருமை கொண்டவர்களை பார்க்கிலும், தேவ கிருபையை நாடுகிற பாவிகளே தேவனுக்கு நெருக்கமானவர்கள் என்பதை கற்றுக் கொள்கிறோம்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. சுய நீதியும், பெருமையும் இல்லாமல், மனந்திரும்புதலும், தேவகிருபைக்காக காத்திருக்கும் பாவியை போல் இருப்போம் (பரி. லூக்கா 18:13).
2. எல்லாம் முயற்சிகளிலும், அணுகுமுறையிலும் மனத் தாழ்மையை கடைபிடிப்போம். (1 பேதுரு 5:5 (ஆ)).
3. நாம் தேவனுடைய சித்தம் செய்கிறவர்களாக இருப்போம் அது மாத்திரமே நம்மை தேவனுடைய ராஜ்யத்திற்கு கொண்டு செல்லும் (பரி. மத்தேயு 7:21).





## 15 ஆகஸ்ட் 2025, வெள்ளி

### தியோடோகோஸின் மரணம், விண்ணுலகம் செல்லும் பண்டிகை
*(ஷூனோயோ)*

**வேத வாசிப்பு**

| யாத்திராகமம் 3:1-6; 19:16-23 | எசேக்கியேல் 44:1-3 | எபிரெயர் 2:14-18 ; 9:3-12 | பரிசுத்த லூக்கா 11:22-28 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள் :**
**மரணம் என்பது பரலோகத்திற்கான ஒரு வாசல்.**

*இந்த பண்டிகை எதைப் பற்றியது?*

இந்த பண்டிகை தேவனின் தாய் மரியாளின் (தியோடோகோஸ்) 'நித்திரையை' கொண்டாடுகின்றது.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

தேவனின் தாயாகிய மரியாளை திருச்சபை எவ்வாறு நேசித்தது, கனப்படுத்தியது என்பதை நினைவூட்டுகிறது. மரணம் என்பது பயப்படத்தக்க விஷயம் அல்ல என்று கற்றுக் கொண்டோம், கர்த்தருக்குள் மரிக்கிறவர்களுக்கு மரணம் மகிழ்ச்சியான தருணமே. நம்மை விட்டு பிரிந்தவர்களை ஒருபோதும் மறக்காமல் அவருடைய நினைவுகளை நாம் மறக்காமல் வைக்க வேண்டும்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. திருச்சபை எப்பொழுதும் செய்வதை போல, நாம் தேவனின் தாயாகிய மரியாளை கனம் பண்ணி நேசிக்க வேண்டும், அவர்களை பெரிய பரிசுத்தவானாக அவரது ஐகானுக்கு மரியாதை செய்ய வேண்டும்.
2. நம்முடைய தெய்வீக ஆராதனை வழிபாட்டில் நம்மை விட்டு கடந்துச் சென்ற பரிசுத்தவான்களை நினைவு கூறுவதின் மூலம் அவர்களுடைய நினைவுகளை மறக்காமல் வைத்திருக்கிறோம்.
3. தேவனின் தாய் மரியாள் போன்ற நம்மை விட்டுப் கடந்து சென்றவர்கள் மற்றும் நம்மை விட்டு கடந்து சென்ற நமது அன்பான மெட்ரோபோலிடன், அத்தனாசியஸ் யோஹான் அவர்கள் இயேசுவுடன் இருக்கிறார், இப்போதும் அவர் நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருகிறார்.

** பரிசுத்த மரியாள் தியோடோகோஸ் என்று நாம் கனப்படுத்துவது - 'தேவனை சுமந்தவள்' என்று அர்த்தம். இது இயேசுவின் மனிதத்துவத்தையும், தெய்வீகத்தையும் தனித்தனியாக பிரிக்காமல் இருக்க உறுதியாய் இருக்கிறது. இரண்டு தன்மைகளைக் கொண்டவராக இருக்கிறார்: அதாவது இயேசு தேவன் அதே நேரத்தில் மனிதன், தெய்வீக தன்மையும், மனித தன்மையும் உள்ளவர் அவர்.*

| 17 ஆகஸ்ட் 2025 | டோர்மீஷனுக்கு பின்வரும் முதலாம் ஞாயிறு<br>42-வது ஞாயிறு | | |
|---|---|---|---|
| வேத வாசிப்பு | | | |
| 1 சாமுவேல் 8:4-9 | சங்கீதம் 34:15-22 | எபேசியர் 6:10-17 | பரிசுத்த லூக்கா 6:39-45 |

**நற்செய்தியின் கருப்பொருள்: மற்றவர்களை நியாயந்தீர்க்கா தீர்கள், மாறாக இரக்கமுள்ளவர்களாக இருங்கள்.**

*இந்தப் பகுதி எதைப் பற்றியது?*

நாம் மற்றவர்களை நியாயம் தீர்க்க வேண்டாம். மாறாக நம்மை நாமே சோதித்து பார்க்க வேண்டும் என்று இந்த உவமையின் மூலம் இயேசு கூறுகிறார், மற்றவர்களை நியாயந்தீர்க்க வேண்டாம் என்றும், அவ்வாறு செய்யும் போது அதே அளவின்படி நியாந்தீர்க்கப்படுவோம் என்றும் கற்றுக்கொள்கிறோம், (பரி மத்தேயு 7:1). மேலும் இந்த பகுதி, மன்னித்து இரக்கம் காட்டவேண்டும் என்று போதிக்கிறது.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. மற்றவரை நியாயந்தீர்க்க முற்படும்போது உடனே நிறுத்தி மனந்திரும்ப வேண்டும் ; ஏனென்றால் மற்றவர்களை குற்றப்படுத்தும் அதே குற்றத்தை நாமும் செய்திருப்போமாக.

2. தேவன் நம்மை மன்னித்து இருக்கிறபடியால், நாமும் மற்றவரை தாராளமாக மன்னிக்க மனம் படைத்தவராக இருக்க வேண்டும்.

3. எப்போதும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே தேவ குமாரனே பாவியாகிய என் மீது இரக்கமாயிரும் என்ற 'இயேசுவின் ஜெபத்தை' ஜெபியுங்கள்.





| 24 ஆகஸ்ட் 2025 | டோர்மீஷனுக்கு பின்வரும் இரண்டாம் ஞாயிறு<br>43-வது ஞாயிறு | | |
|---|---|---|---|
| வேத வாசிப்பு | | | |
| ஆதியாகமம் 6:3-12 | சங்கீதம் 12:1-7 | 1 தெசலோனிக்கேயர் 5:1-11 | பரிசுத்த லூக்கா 11:9-20 |

**நற்செய்தியின் கருப்பொருள்: சோர்ந்து போகாமல் ஜெபித்தல்**

*இந்தப் பகுதி எதைப் பற்றியது?*

ஜெபத்தைப் பற்றி போதிக்கும் போது, சோர்ந்து போகாமல் ஜெபிக்கும் போது தேவன் நமக்கு பதிலளிப்பார் என்று இயேசு கூறுகிறார். இயேசு ஒரு பிசாசு பிடித்த மனிதனை குணமாக்கும் போது அவரைப் பார்த்து அநேகர் ஆச்சரியப்பட்டார்கள் ஆனாலும் சிலர் அவர் பிசாசின் வல்லமையினால் இதை செய்கிறார் என்று குற்றம் சாட்டினார்கள்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

தேவனுக்கு சித்தமான காரியங்களை குறித்து ஜெபிக்கும் போது சோர்ந்து போகக்கூடாது தேவனை சோதிக்கும்படியாக கேட்கும் எந்த ஜெபத்திற்கும் பதில் வராது. இயேசு பிசாசை துரத்தினார், காரணம் அவர் தேவனுடைய குமாரன். (vs. 16)

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. ஒரு காரியத்திற்காக ஜெபிக்கும் போது சோர்ந்து போகவோ, கைவிடவோ கூடாது, விடாமுயற்சியாக இருக்க வேண்டும்.

2. தேவனை சோதிக்கும்படியான அடையாளங்களை கேட்காமல், அவர் மீது விசுவாசம் வைக்க வேண்டும்.

3. இயேசுவின் நாமத்தில் ஜனங்களுக்கு அற்புதங்கள் நடந்தாலும், எதிர்ப்புகளும் வரும்.

**31 ஆகஸ்ட் 2025** **டோர்மீஷனுக்கு பின்வரும் மூன்றாம் ஞாயிறு**

**44-வது ஞாயிறு**

| **வேத வாசிப்பு** | | | |
|---|---|---|---|
| எசேக்கியேல் 18:21-24 | சங்கீதம் 146 | 2 கொரிந்தியர் 10:1-7 | பரிசுத்த மத்தேயு 17:22-27 |

**நற்செய்தியின் கருப்பொருள் : நமது கடமைகளை நிறைவேற்றுதல்**

*இந்த வேத பகுதி எதைப் பற்றியது?*

இயேசு தனது பாடுகளையும், அவரது மரணத்தையும் முன்னறிவிக்கின்றார். மேலும் இங்கே ஒரு அற்புதம் நடக்கின்றது அதாவது இயேசுக்கும் பரி.பேதுருவுக்கும் தேவாலயத்திற்கு செலுத்த வேண்டிய வரியை எவ்வாறு கட்டினார்கள் என்பதே.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

இயேசு யாரும் வற்புறுத்தாது, மனமுவந்து சிலுவைக்குச் சென்றார் என்பதை நாம் அறிந்துகொள்கிறோம். தேவையில்லாத குற்றச்சாட்டுகளை தவிர்க்க இயேசு விரும்பினார் அரசாங்க கடமைகள் மற்றும் சட்ட திட்டங்களுக்கு நேர்மையாக இருப்பதன் மூலம், வரியை செலுத்த வேண்டும் என கட்டாயப்படுத்தினார்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. இயேசு நம்முடைய எதிர்காலத்தின் தேவைகள், எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார், இதை அவர் அறிந்திருப்பது நமக்கு ஆறுதலாக இருக்கின்றது.

2. நம்முடைய கடமைகளையும், பொறுப்புகளையும் நிறைவேற்ற இயேசு கிறிஸ்து நமக்கு உதவி செய்வேன் என்று வாக்குத்தத்தம் கொடுத்திருக் கின்றார், நாம் அவருக்கு கீழ்ப்படிந்து எல்லாவற்றையும் அவருக்கு அர்ப்பணித்தால் மட்டும் போதும்.

3. நமக்கு நியாயமான காரணங்கள் இருந்தாலும், நாம் தேவையில்லாமல் மற்றவர்களை புண்படுத்தக்கூடாது.





**7 செப்டம்பர் 2025** **டோர்மீஷனுக்கு பின்வரும் நான்காம் ஞாயிறு**

**45-வது ஞாயிறு**

| **வேத வாசிப்பு** | | | |
|---|---|---|---|
| யாத்திராகமம் 3:1-6, 11-14 | சங்கீதம் 37:1-11 | 1 கொரிந்தியர் 3:16-23 | பரிசுத்த மத்தேயு 5:38-48 |

**நற்செய்தியின் கருப்பொருள்: நேர்மையுடன் நடத்தல்**

*இந்த வேதப்பகுதி எதைப் பற்றியது?*

நாம் வாழ்வதன் அவசியத்தைப் பற்றி இயேசு போதிக்கும் போது, நம்மீது இரக்கம் காட்டாமலும், அன்பில்லாமலும் இருக்கும் அயலகத்தாரை நேசிக்கும் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

நாம் தீமைக்கு தீமையாக பதிலளிக்காமல் இரக்கத்தை வெளிக்காட்ட கற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யும்போது, நாம் தகப்பனாகிய அவரைப் முழுமையாக பின்பற்றி வளர்கிறோம்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. சுயக்கட்டுப்பாட்டிற்காக ஜெபியுங்கள், இதனால் யாராவது உங்களை வார்த்தைகளினாலோ, செயல்களினாலோ காயப்படுத்தினால், நீங்கள் பதிலுக்கு வார்த்தைகளினாலோ அல்லது வன்முறையானாலோ பதிலளிக்க மாட்டீர்கள்.

2. உங்களை நிந்திப்பவர்களை தேவன் ஆசீர்வதிக்கும்படி ஊக்கமாய் ஜெபியுங்கள்.

3. காணிக்கை, ஜெபம், உபவாசம் கடைபிடித்தல் போன்ற ஆவிக்குறிய காரியங்களை கற்றுக்கொள்வது நாம் நம் பரலோக பிதாவைப் போல மாற உதவுகிறது. (பரி.மத்தேயு 6: 1-18)

## 8 செப்டம்பர் 2025, திங்கள்

## தியோடோகஸ் பிறப்பின் பண்டிகை

**வேத வாசிப்பு**

| ஆதியாகமம் 28:10-17 | எசேக்கியேல் 43:27-44:4 | பிலிப்பியர் 2:5-11 | பரி.லூக்கா 1:39-49, 56; 11:27-28 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள்: தேவனின் தாயாகிய மரியாள் ஒரு சிறந்த உதாரணம்**

*இந்த பண்டிகை எதைப் பற்றியது?*

நம் கர்த்தராகிய இயேசுவின் தாயான பரிசுத்த மரியாளின் பிறப்பைக் கொண்டாடும் பண்டிகை, இது நமக்கு பரிசுத்த திருச்சபையின் பாரம்பரியத்தால் கையளிக்கப்பட்டது.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

பக்தியுள்ள மற்றும் வயதானவர்களின் ஜெபங்களுக்கு தேவன் எவ்வாறு பதிலளிக்கின்றார் என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம். மற்றும் இந்த வயதான தம்பதிகள் தேவனுக்கு கொடுத்த வாக்குறுதியின் காணிக்கையாக (அர்ப்பணிப்பு) குழந்தையான மரியாளை தேவனுக்கு ஈவாக கொடுத்தனர்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. பரி. மரியாளின் பெற்றோரைப் போலவே, நம் பிள்ளைகளை அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, தேவனுக்கும் அவருடைய பரிசுத்த திருச்சபைக்கும் சேவை செய்ய ஒப்புக்கொடுப்பது மிகப்பெரிய பாக்கியமாக எண்ண வேண்டும்.

2. வாழ்க்கையில் அவருடைய நோக்கங்களை பின்பற்ற நமக்கு ஒரு சிறந்த முன்மாதிரி உள்ளது. பரிசுத்த மரியாள் நம்மைப் போல ஒரு மனிதராக இருந்து தேவனுக்கு முழுமையான கீழ்ப்படிதலைத் தேர்ந்தெடுத்தார்.

3. எப்படி பரி. மரியாள் எல்லோரையும் கிறிஸ்துவிடம் வழிநடத்தினாரோ அது போலவே நாமும் ஜீவனுள்ள தேவனுடைய 'ஆலயமாக' மாற வேண்டும்.





## 14 செப்டம்பர் 2025

## 46-வது ஞாயிறு

## பரி. திருச்சிலுவைப் பண்டிகை

**வேத வாசிப்பு**

| எண்ணாகமம் 21:4-9 | சங்கீதம் 98:1-5 | கலாத்தியர் 2:17-3:14 | பரி.லூக்கா 21:5-28 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள்: சிலுவையின் வெற்றி**

*இந்த பண்டிகை எதைப் பற்றியது?*

இந்த பண்டிகையானது உண்மையான சிலுவையை அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறையப்படுவதற்கு பயன்படுத்தப்பட்ட சிலுவை கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்று நிகழ்வை நினைவுபடுத்துகிறது.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

4 ஆம் நூற்றாண்டில், புனித ஹெலினா அற்புதமான உண்மையான சிலுவையை எப்படி கண்டுபிடித்தார் என்பதை நாம் அறிந்துகொள்கிறோம் மற்றும் அவரது மகன் பேரரசர் கான்ஸ்டன்டைன் எப்படி அங்கே ஒரு ஆலயத்தைக் கட்டினார் என்பதையும் அறிந்துகொள்ள உதவுகிறது.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. சிலுவை நமது விசுவாசத்தின் முதன்மை அடையாளமாக இருப்பதால், நாம் சிலுவை அடையாளமிடுகிறோம். பலிபீடங்களில் வைத்தல் (வீடு & திருச்சபையில்) மற்றும் சிலுவையை அணியவும் செய்கின்றோம்.

2. சிலுவையானது எல்லா தீமைகளையும் வென்ற தேவனின் சின்னமாக இருப்பதால், நாம் அதை உயர்த்துகிறோம். இந்த பண்டிகையின் போது உலகின் நான்கு திசைகளையும் நோக்கி சிலுவையை உயர்த்துகிறோம்.

3. நாம் சிலுவையைப் பார்க்கும்போது, கிறிஸ்து நமக்காக பட்ட பாடுகளுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

4. சிலுவை என்பது நாம் நமது சிலுவையை எடுத்து கிறிஸ்துவை பின்பற்றும் அழைப்பை நமக்கு நினைவூட்டுகின்றது.

## 21 செப்டம்பர் 2025 பரிசுத்த திருச்சிலுவை பண்டிகைக்கு பின்வரும் முதலாம் ஞாயிறு

### 47-வது ஞாயிறு

| வேத வாசிப்பு | | | |
|---|---|---|---|
| ஏசாயா 1:10-20 | சங்கீதம் 34 | 1 கொரிந்தியர் 2:10-16 | பரி.மாற்கு 13:28-37 |

**நற்செய்தியின் கருப்பொருள்: விழித்திருங்கள் மற்றும் ஆயத்தமாயிருங்கள்**

*இந்த வேதப்பகுதி எதைப் பற்றியது?*

கிறிஸ்து நிச்சயமாக மீண்டும் வருவார். ஆனால் அவரது வருகை சீக்கிரமாக இருப்பதால் நாம் 'விழிப்புடனும்' ஆயத்தத்துடனும் இருக்க வேண்டும்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

சில நேரங்களில் அவருடைய வருகை தாமதமாவதால், நமது எண்ணங்கள் பூமிக்குரிய காரியங்களில் திசைதிருப்பப்பட்டு போகலாம் (பரி. மத்தேயு 13:38,39) மற்றும் ஆயத்தமில்லாமல் கைவிடப்பட்டவர்களாக (பத்து கன்னிகைகளின் உவமை). கல்யாண வீட்டில் அனுமதிக்கப்படாமல் போகலாம். எனவே நம் வாழ்வில் சோம்பேறித்தனத்தை, அனுமதிக்காமல் அவர் வருகை வரை உண்மையாகவும் அவருடைய வேலையை கடின உழைப்புடனும் செய்யுங்கள்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. இயேசு இதோ திரும்பி வந்துவிட்டார் என்று சொல்லும் நபர்களின் வார்த்தைகளால் ஏமாற வேண்டாம். குறிப்பிட்ட தேதி! அவர் திரும்பி வரும் நேரம், இது யாருக்கும் தெரியாது. நாமும் அதைப்பற்றி அறிய அதன் பின் செல்ல வேண்டும்.

2. அவர் நமக்கு வாக்கு தந்தது போலவே, நம்மை அவரது வீட்டிற்கு அழைத்துச் செல்வார் என்பதில் உறுதியாக இருங்கள்.

3. அவர் வரும்போது, நம்மை உண்மையுள்ளவர்களாகக் காண வேண்டும்; எனவே, கிறிஸ்து நமக்கு என்ன. கற்றுக் கொடுத்திருக் கிறாறோ அதை தொடர்ந்து செய்துகொண்டே இருப்போம்.





## 28 செப்டம்பர் 2025 பரிசுத்த திருச்சிலுவைப் பண்டிகைக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு

### 48-வது ஞாயிறு

| வேத வாசிப்பு | | | |
|---|---|---|---|
| 1 இராஜாக்கள் 3:5-9 | சங்கீதம் 19:7-14 | 1 கொரிந்தியர் 2:14-3:9 | பரிசுத்த மத்தேயு 16:5-12 |

**நற்செய்தியின் கருப்பொருள்: கள்ள போதகர் மற்றும் அவர்களின் உபதேசகங்களுக்கு எச்சரிக்கையாய் இருங்கள்.**

*இந்த வேதப் பகுதி எதைப் பற்றியது?*

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு மாயக்காரரான பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்களின் போதனைகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று கூறுகிறார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

சீஷர்கள் இயேசுவோடு இருந்தபோதிலும், அவர்களின் விசுவாசக் குறையால் அவர்கள் ஆவிக்குரிய உண்மைகளை புரிந்துகொள்ள முடியாதபடிக்கு அவர்களுடைய இருதயங்கள் கடினமாயிற்று. கொஞ்சம் புளித்த மாவு அனைத்துமாவையும் புளிக்க வைப்பதுபோல கள்ள உபதேசம் வேகமாக பரவி ஜனங்களின் வாழ்வை வேகமாக அழித்துப்போடுகிறது.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. தேவனின் உண்மையான சத்தியத்தை அறிந்துகொள்ள பகுத்தறியும் வரமும், கொழுந்துவிட்டெரியும் இருதயமும் வேண்டும் என தேவனிடம் கேட்க வேண்டும்.

2. பரிசுத்த திருச்சபையின் உண்மையான போதனைகளைப் பற்றிக் கொள்ளுங்கள் - அதனால் நாம் வழிதவறிப் செல்லமாட்டோம்.

3. கள்ளப் போதகர்களையும் அவர்களுடைய உபதேசங்களையும் ஊக்குவிக்க வேண்டாம். அது உன்னை அழித்துவிடும். (2 தீமோத்தேயு 2:17)

**5 அக்டோபர் 2025** **பரிசுத்த சிலுவையின் பண்டிகைக்கு பின்வரும் மூன்றாம் ஞாயிறு**
**SOC ஞாயிறு** - *சிறப்பு காணிக்கை*
**49-வது ஞாயிறு**

**வேத வாசிப்பு**

| நீதிமொழிகள் 1:2-9 | சங்கீதம் 8 | ரோமர் 8:1-11 | பரிசுத்த மாற்கு 2:23-28 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள்: இரக்க குணம் நியாயப் பிரமாணத்தை வெல்லும்**

*இந்த வேதப்பகுதி எதைப் பற்றியது?* (மேலும் வாசிக்கவும் பரி.மத்தேயு 12:1-14 & பரி.லூக்கா 6:1-11)

இந்த பகுதியில் பரிசேயர்கள் தங்கள் மதச் சடங்காச்சாரியங்களில் மிகவும் உறுதியாக இருந்ததாகவும் காண்கிறார்கள். இயேசுவின் சீஷர்கள் ஓய்வுநாளில் 'நியாயப்பிரமாணத்தை' மீறியதாகவும் குற்றம் சாட்டினர். நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகின்ற இயேசு, அந்த இரக்கத்தை அவர்களுக்கு நினைவூட்டுகிறார். தேவன் பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறார் (மத சடங்காச்சாரியங்கள்) (பரி.மத்தேயு 12:7).

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

தேவனின் சட்டங்கள் மக்களைக் கண்டிக்க மட்டுமே பயன்படுத்தக் கூடாது; காரணம் அவை மற்றவர்களின் தேவைக்கு நம்மை உணர்ச்சியற்ற வர்களாக மாற்றுகிறது. வெறும் மதக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை கொடுப்பதை விட இரக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து - நன்மை செய்து மற்றவர்களின் தேவைகளை உணர்ந்து, அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. மனுஷர்மேல் இரக்கமாயிருங்கள்; அவர்களின் தேவைகளை உணர்ந்து நியாயம் தீர்ப்பதற்கு தாமதமாயிருங்கள்.

2. மத சட்டங்கள் நம்மை குருடர்களாகவோ அல்லது மற்றவர்களை உணர்ச்சியற்றவர்களாகவோ மாற்ற அனுமதிக்காதீர்கள்.

3. இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றுங்கள், சுயநீதிமான்களான பரிசேயர்களைப் பின்பற்றாதீர்கள்.



லெக்ஷனரி 2024-'25

**12 அக்டோபர் 2025** **பரிசுத்த திருச்சிலுவை பண்டிகைக்கு பின்வரும் நான்காம் ஞாயிறு**
**50-வது ஞாயிறு**

**வேத வாசிப்பு**

| 1 இராஜாக்கள் 8:22-30 | சங்கீதம் 42 | 1 கொரிந்தியர் 1:21-29 | பரி.லூக்கா 16:9-18 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள்: பணத்தில் உண்மையாக இருங்கள்**

*இந்த வேதப்பகுதி எதைப் பற்றியது?*

இந்த வேதப்பகுதி உண்மையாக இருப்பதைப் பற்றி கூறுகிறது, குறிப்பாக நமது பணத்துடன் (பொருட்கள் உடைமைகள், செல்வம் போன்றவை), பணத்தைப் பற்றிய நமது அணுகுமுறை எப்படி இருக்கின்றது. அது நம் வாழ்வில் உண்மையான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுடன் எவ்வாறு தொடர்புடையதாக இருக்க வேண்டும்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

பணம் தானாகவே தீயதல்ல என்றாலும், நமது பணத்தை உண்மையுடன் கையாள்வது (நம்முடையதோ அல்லது மற்றவர்களோ) தேவனுடன் நேரடியாக தொடர்புடையதாகவும் மற்றும் நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங் களையும் தருகின்றது.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. தேவன் நமக்குக் கொடுத்த பணம் மற்றும் ஆசீர்வாதங்களில் உண்மையாக இருங்கள். தசமபாகம், காணிக்கைகள், தர்மங்கள் மற்றும் தேவனின் சேவைக்காக கொடுத்தல்.

2. பணத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு முடிவுகளை எடுக்காதீர். ஒருபோதும் பணத்திற்கு அடிமையாக இருக்காதீர்கள்.

3. நித்தியத்திற்காக நண்பர்களைப் சம்பாதிக்க பணத்தைப் பயன் படுத்துங்கள்.

## 19 அக்டோபர் 2025 — பரிசுத்த சிலுவையின் பண்டிகைக்கு பின்வரும் ஐந்தாம் ஞாயிறு

### 51-வது ஞாயிறு

**வேத வாசிப்பு**

| லேவியராகமம் 2:1-3 | சங்கீதம் 46 | 1 தீமோத்தேயு 6:13-21 | பரிசுத்த மத்தேயு 23:1-12 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள்: தாழ்மையுள்ளவர்கள் உயர்த்தப்படுவார்கள்**

*இந்த வேதப்பகுதி எதைப் பற்றியது?*

சிலர் எப்படி தங்கள் ஆவிக்குரிய அதிகாரத்தை எவ்வாறு தவறாக பயன் படுத்துகிறார்கள், என்பதைப் பற்றி இயேசு கூறுகின்றார் அவருடைய சீஷர்களாகிய நாம் அவர்களிலிருந்து மாறுபட்டவர்களாக இருக்க வேண்டும்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

நாம் தேவனுடைய பார்வையிலிருந்து தப்பிக்க இயலாது என்று கற்றுக்கொள்கிறோம், நம்முடைய எல்லா நோக்கங்களும் தேவனுக்கு மிகத்தெளிவாகத் தெரியும். எனவே, நம்மை நாம் உயர்த்தும்போது, அது தேவனுக்குப் பிரியமானதாக இருக்காது. தேவனுக்குப் பிரியமானது மனத்தாழ்மையும், சேவை இருதயமே ஆகும்.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. நாம் மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக எதையும் ஒருபோதும் செய்ய வேண்டாம்.
2. ஆவிக்குரிய அதிகாரத்தில் உள்ள அனைவரின் சொல்கேட்டுச் செய்ய வேண்டும்.'
3. தாழ்மையுடனும், சேவை செய்யும் இருதயத்துடனும் இருக்க முயற்சி செய்யுங்கள்.

** போதகரே என்றும் பிதா என்றும் அழைக்கப்படாதிருங்கள் என மாயக்கார தலைவர்களைக் குறித்து இயேசு எச்சரித்தார். இதை தவறாக புரிந்துகொள்ளாதிருங்கள். திருச்சபையின் ஆரம்ப நாட்களிலிருந்து தேவ அதிகாரத்திற்கு உட்பட்ட பேராயர்கள் மற்றும் குருமார்கள் 'பிதா' என்று அழைக்கப்பட்டனர்.*





## 26 அக்டோபர் 2025 — பரிசுத்த சிலுவையின் பண்டிகைக்கு பின்வரும் ஆறாம் ஞாயிறு

### 52-வது ஞாயிறு

**வேத வாசிப்பு**

| ஏசாயா 43:16-25 | சங்கீதம் 84 | 1 கொரிந்தியர் 5:6-13 | பரிசுத்த லூக்கா 18:18-27 |
|---|---|---|---|

**நற்செய்தியின் கருப்பொருள்: எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுக்கு முன்னுரிமை கொடுத்தல்**

*இந்த வேதப்பகுதி எதைப் பற்றியது?*

தேவனைப் உண்மையாக பின்பற்ற விரும்பும், ஒரு ஐசுவரியவான் மற்றும் வாலிபனின் உரையாடல். தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு தடையாக நிற்பது எது என்பதை அவன் உணர இயேசு அவனுக்கு உதவி செய்கிறார்.

*இதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*

உலகத்தின் ஐசுவரியத்தைவிட தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது மிக முக்கியமானது. ஆனால் உலகத்தின் செல்வத்தின் மீது நாம் அதிக பற்றுள்ளவர்களாய் இருப்பது நாம் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைத் தடுக்கின்றது.

*இதை நாம் எவ்வாறு செயல்முறைப்படுத்தலாம்?*

1. சத்தியத்தை கடைப்பிடித்தால் மட்டும் போதாது; கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் விட்டுவிட ஆயத்தமாக இருக்க வேண்டும் கிறிஸ்து வினிமித்தம் எல்லாவற்றையும் விட்டுவிடுங்கள்.
2. செல்வம், உடைமைகள், குடும்பம், கௌரவம், சமூகம், கல்வி இவையாவும் தேவனுக்கு அடுத்தபடியாக அமைய வேண்டும்.
3. கிறிஸ்துவைப் பின்பற்றுவதிலிருந்து நமக்கு ஏதாவது தடையாக இருந்தால் அந்த தடையை வெல்ல தேவன் நமக்கு உதவ முழு மனதோடு ஜெபிக்க வேண்டும். தேவனால் கூடாதது ஒன்றுமில்லை.

# பிலிவர்ஸ் ஈஸ்டர்ன் சர்ச் திருச்சபை நாட்காட்டி 2023 - 2024

| நாள்/ தினம் | பண்டிகைகள் | விளக்கம் |
|---|---|---|
| 3 நவம்பர் 2024, ஞாயிறு | திருச்சபையின் சுத்திகரிப்பு (கூதேஷ் யெதோ) | திருச்சபையின் கால அட்டவணையின் ஆரம்பம். சபை சுத்திகரிப்பு ஞாயிறு. |
| 10 நவம்பர் 2024, ஞாயிறு | சபையின் பிரதிஷ்டை (ஹூதோஷ் யெதோ) | சபையின் அர்ப்பணிப்பு |
| 17 நவம்பர் 2024, ஞாயிறு | சகரியாவுக்கு அறிவிக்கப்படல் (சுபோரப் டகார்யோ) | காபிரியேல் தூதன் சகரியாவிற்கு யோவான் ஸ்நானகனின் பிறப்பை அறிவித்த தினத்தை இந்த ஞாயிறு நினைவுகூறுகிறது |
| 21 நவம்பர் 2024, வியாழன் | **தியோடோகஸ் பிரவேசத்தின் பண்டிகை** | சிறுகுழந்தையாக, பரி.கன்னி மரியாள் எருசலேம் தேவாலயத்திற்குள் பிரவேசித்த நாளை அனுசரிக்கும் பண்டிகை |
| 24 நவம்பர் 2024, ஞாயிறு | தியோடோகஸ் பிரவேசத்தின் அறிவிப்பு (சுபோரெப்டப்தால்டோ) | பரி. கன்னி மரியாளுக்கு காபிரியேல் தூதன் கூறியது அவர் இயேசுகிறிஸ்துவின் தாயாகப் போவதாக அறிவித்தார். |
| 1 டிசம்பர் 2024, ஞாயிறு | **பிறப்பின் பண்டிகை (25 நாள் உபவாசம்)** | மனனிதனாக பிறந்த இயேசுவின் வருகையை வரவேற்கும்விதமாக கிறிஸ்மஸ் உபவாச நாளை ஆயத்தமாகி அறிவித்தல். |
| 1 டிசம்பர் 2024, ஞாயிறு | பரி.மரியாள் எலிசபெத்தை சந்தித்தல் (மெசல்டோ) | யோவான் ஸ்நானகனின் தாயாகிய எலிசபெத்தை பரி.கன்னி மரியாள் சந்தித்த நாளை நினைவுகூறுதல் |
| 8 டிசம்பர் 2024, ஞாயிறு | யோவான் ஸ்நானகனின் பிறப்பு (மௌலோடப்-டி-யுபனான் மம்டோனா) | யோவான் ஸ்நானகனின் பிறப்பைக கொண்டாடும் நாள் |
| 15 டிசம்பர் 2024, ஞாயிறு | பரி.யோசேப்பிற்கு அறிவிக்கப்படல் | பரி.கன்னி மரியாள் மூலம் கிறிஸ்து பிறப்பார் என்று பரி.யோசேப்புக்கு காபிரியேல் தூதனால் அறிவிக்கப்பட்ட நாளை அனுசரித்தல் |
| 18 டிசம்பர் 2024, புதன் | அப்போஸ்தலனாகிய பரி. தோமாவின் துக்ரோனோ | பரி. தோமா இரத்தசாட்சியாக மரித்த நாளை நினைவுகூறும் நாள் |
| 25 டிசம்பர் 2024, புதன் | **இயேசு கிறிஸ்து பிறப்பின் பண்டிகை** (யெல்தோ) | கிறிஸ்துவின் பிறப்பு: இப்பண்டிகை நம்மை இரட்சிக்கும்படி மனிதனாக அவதரித்த கிறிஸ்து பிறப்பை நினைவு கூறுவதாகும் |
| 1 ஜனவரி 2025, புதன் | நம்முடைய கர்த்தரின் விருத்ததேசனத்தின் பண்டிகை | யூதப் பாரம்பரியத்தின்படி, விருத்தசேதனமும் , இயேசு என்ற பெயரிட்ட நாளையும் கொண்டாடுவது |
| 6 ஜனவரி 2025, திங்கள் | **நம்முடைய கர்த்தரின் தியோஃபனி பண்டிகை** (தெனகா) | இப்பண்டிகை பரி.யோவான் ஸ்நானகனால் கிறிஸ்துவுக்கு யோர்தான் நதியில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதை நினைவு கூறுகின்றது |





| நாள்/ தினம் | பண்டிகைகள் | விளக்கம் |
|---|---|---|
| 7 ஜனவரி 2025, செவ்வாய் | பரி. யோவான் ஸ்நானகன் தினம் | பரி.யோவான் ஸ்நானகனின் தலை துண்டிக்கப்பட்ட நாளை நினைவுகூறுதல் |
| 8 ஜனவரி 2025, புதன் | பரி. ஸ்தேவான் தினம் | டீக்கன்களின் தலைவரும் இரத்தசாட்சிகளில் முதல்வருமான, பரி. ஸ்தேவான் இரத்தசாட்சியாக மரித்ததை நினைவுகூறுகின்றது. |
| 18 ஜனவரி 2025, சனி | அலெக்சான்ட்ரியா பாட்ரியார்க்கின் செயிண்ட். அத்தெனேஷியஸ் பண்டிகை | இது 4-ம் நூற்றாண்டில் அலெக்ஸாண்ட்ரியாவின் முற்பிதாவான பரி. அத்தெனேஷியஸின் பண்டிகையாகும். இவர் திருச்சபையின் மருத்துவராகக் கருதப்பட்டு ஆர்தொடாக்ஸின் தந்தை என அழைக்கப்படுகின்றார் |
| 2 பிப்ரவரி 2025, ஞாயிறு | மகா பண்டிகை கிறிஸ்துவின் பிரவேசம் (மயல்தோ) | குழந்தை இயேசு தேவாலயத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நாளைக் கொண்டாடுதல் |
| 9 பிப்ரவரி 2025, ஞாயிறு | கடந்து சென்ற அனைத்து விசுவாசமுள்ள மக்கள் (அனீடே ஞாயிறு) | இவ்வுலகத்தை விட்டுக் கடந்து சென்ற திருச்சபையின் அனைத்து விசுவாசிகளை நினைவுகூறும் நாள் |
| 10 பிப்ரவரி 2025, திங்கள் | நினிவே லெந்து/ மூன்று-நாள் லெந்தின் ஆரம்பம் | பழைய கால நினிவே மக்கள், யோனாவிடம் தேவனால் கூறப்பட்ட எச்சரிக்கையை ஏற்று தேவனுடைய இரக்கத்தைப் பெற உபவாசத்தை அறிவித்த நாளை அனுசரித்தல். |
| 16 பிப்ரவரி 2025, ஞாயிறு | கடந்து சென்ற அனைத்து குருமார்கள் தினம் (கோஹ்னே ஞாயிறு) | இவ்வுலகத்தை விட்டுக் கடந்து சென்ற பரிசுத்த திருச்சபையின் விசுவாசமுள்ள குருமார்களின் விசுவாசத்தையும், பரிசுத்த திருச்சபைக்கான அவர்களின் சேவையையும் நினைவுகூறும் நாள். |
| 2 மார்ச் 2025, ஞாயிறு | பெரிய லெந்தின் முதல் ஞாயிறு/பெரிய லெந்தின் பெதுர்தா (கொதைன் ஞாயிறு) | இயேசு, கானாவில் செய்த முதல் அற்புதத்தை நினைகூறுவதுடன் பெரிய லெந்து ஆரம்பமாகிறது. பெதுர்தா - திரும்புதல், நிறுத்துதல் |
| 3 மார்ச் 2025, திங்கள் | பெரிய லெந்தின் முதல் திங்கள் கிழமை | பெரிய லெந்தின் முதல் திங்கள் கிழமையில் விசுவாசிகள் பெரிய லெந்திற்குள்ளாக வரும்படியாக உதவி செய்வதற்கான சீர்பொருந்தும் ஆராதனை |
| 9 மார்ச் 2025, ஞாயிறு | பெரிய லெந்துவின் இரண்டாம் ஞாயிறு | தொழுநோயாளியை குணப்படுத்தும் அற்புதத்தை நினைவுகூறும் நாள். |
| 16 மார்ச் 2025, ஞாயிறு | பெரிய லெந்துவின் மூன்றாவது ஞாயிறு (மஹாரியோ ஞாயிறு) | பக்கவாத நோயாளியை குணப்படுத்தும் அற்புதத்தை நினைவுகூறும் நாள். |
| 23 மார்ச் 2025, ஞாயிறு | பெரிய லெந்துவின் 4-ம் ஞாயிறு (கானானைட்டோ ஞாயிறு) | கானானிய ஸ்திரீயின் மகள் சுகம் பெற்ற நாளை அனுசரித்தல் |
| 25 மார்ச் 2025, செவ்வாய் | **தியோடோகஸிற்கு அறிவிக்கப்படுதலின் பண்டிகை** (சுபோரோ) | கிறிஸ்து மனித அவதாரமெடுப்பதை கன்னி மரியாளிடம் காபிரியேல் தூதன் அறிவித்ததை இந்தப் பண்டிகை நினைவுகூறுகின்றது. |

| நாள்/ தினம் | பண்டிகைகள் | விளக்கம் |
|---|---|---|
| 30 மார்ச் 2025, ஞாயிறு | பெரிய லெந்துவின் ஐந்தாம் ஞாயிறு (கிப்பித்தோ ஞாயிறு) | கூனியாய் இருந்த பெண்ணை குணப்படுத்துதலை நினைவுகூறும் நாள். |
| 6 ஏப்ரல் 2025, ஞாயிறு | பெரிய லெந்துவின் ஆறாம் ஞாயிறு (சம்யோ ஞாயிறு) | குருடனை குணமாக்கிய தினத்தை நினைவுகூறுதல் |
| 13 ஏப்ரல் 2025, ஞாயிறு | **குருத்தோலை ஞாயிறு பண்டிகை** | நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எருசலேமிற்குள் பிரவேசித்ததை கொண்டாடும் பண்டிகையாகும் |
| 16 ஏப்ரல் 2025, புதன் | பரிசுத்த புதன் | இந்த பெரிய பரிசுத்த புதன்கிழமையில் திருச்சபை இரண்டு காரியத்தை நினைவில்கொள்கிறது – பரிமளத் தைலத்தினால் அந்த பாவியான ஸ்திரீ கிறிஸ்துவை அபிஷேகம் செய்கிறாள் மற்றும் எஜமானை காட்டிக் கொடுக்க யூத அதிகாரிகளுடன் யூதாஸ் செய்த ஒப்பந்தம். இந்த மாலை நேர வழிபாட்டில் பரிசுத்த எண்ணெயை பொதுவாக விசுவாசிகளுக்கு பூச வேண்டும். |
| 17 ஏப்ரல் 2025, வியாழன் | பரிசுத்த வியாழன் | இது பரிசுத்த வாரத்தின் வியாழக்கிழமையாகும். கிறிஸ்துவை நினைவுகூர்ந்து என்றென்றும் ஆசரிப்பதற்காக அவர்தாமே ஏற்படுத்திய தெய்வீக திருவிருந்து என்னும் சாக்கிரமெந்து நிறுவப்பட்ட கிறிஸ்துவின் இரகசிய இராப்போஜனத்தை நினைவுகூறும் நாளாகும். |
| 18 ஏப்ரல் 2025, வெள்ளி | பெரிய வெள்ளி (ஹஷோ) | இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதை நினைவுகூறும் நாள் |
| 19 ஏப்ரல் 2025, சனி | பரிசுத்த சனிக்கிழமை | இது பரிசுத்த வாரம் மற்றும் பெரிய லெந்து காலத்தின் கடைசி நாளாகும். இந்நாளில் கிறிஸ்துவின் மரண சரீரம் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்ற வேளையில் அவருடைய ஆத்துமா ஹேடஸிற்குச் சென்று அங்கிருந்தவர்களுக்கு நற்செய்தியை அறிவித்து அவர்களை விடுதலையாக்கினதை திருச்சபை நினைவுகூறுகின்றது. |
| 20 ஏப்ரல் 2025, ஞாயிறு | **பண்டிகைகளின் பண்டிகை** உயிர்த்தெழுந்த ஞாயிறு (கிம்தோ) | ஈஸ்டர்: நமக்கு ஜீவனைக் கொடுத்த நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளைக் கொண்டாடும் பண்டிகையாகும் |
| 27 ஏப்ரல் 2025, ஞாயிறு | புதிய ஞாயிறு | இது கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளுக்குப் பின்வரும் முதல் ஞாயிற்றுக்கிமையாகும். கிறிஸ்துவானவர் இன்று பரி. தோமா மற்றும் பிற சீடர்களுக்குத் தோன்றி தன்னுடைய காயங்களைக் காண்பித்து பரி. தோமாவின் சந்தேகங்களை நீக்கினார். |





| நாள்/ தினம் | பண்டிகைகள் | விளக்கம் |
|---|---|---|
| 8 மே 2025, வியாழன் | அத்னேசியஸ் யோகான் முதலாம் மெட்ரோபாலிட்டன் நினைவு நாள் | நம்மை விட்டு கடந்து சென்ற முதலாம் மெட்ரோபாலிட்டன் அத்னேசியஸ் யோகனின் ஆசீர்வதிக்கப்பட்ட நினைவுநாள் |
| 29 மே 2025, வியாழன் | **நம்முடைய கர்த்தர் பரமேறிய பண்டிகை** (சுலோகோ) | கிறிஸ்து உயிர்த்தெழுந்து 40 நாட்களுக்குப் பின்னர் அவர் பரமேறிச் சென்றதை நினைவுகூறும்வகையில் இப்பண்டிகை கொண்டாடப்படுகிறது |
| 8 ஜுன் 2025, ஞாயிறு | **பெந்தெகொஸ்தே பண்டிகை** | பெந்தெகொஸ்தே நாளிலே பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள்மேல் வந்திறங்கினதை இப்பண்டிகை ஆசரிக்கின்றது. இதன் பலனாக சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. |
| 16 ஜுன் 2025, திங்கள் | **அப்போஸ்தலர்களின் லெந்து** | உபவாசமானது ஜீன் 16-ல் ஆரம்பித்து ஜீன் 29-ல் நிறைவுபெறும். இந்த உபவாசமானது பரி.மத் 9:15ல் இயேசு கூறிய வார்த்தைகளை நிறைவேற்றி உபவாசித்த அப்போஸ்தலர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறது (எபி. 13:7) |
| 29 ஜுன் 2025, ஞாயிறு | பரி. பேதுரு மற்றும் பரி. பவுலின் பண்டிகை | அப்போஸ்தலர்களின் தவக்காலம் இந்த பெரிய புனிதர்களின் நினைவாகக் கொண்டாடப்படுகிறது. |
| 3 ஜுலை 2025, வியாழன் | பரி. தோமாவின் தினம் | பரி.தோமையாரின் வாழ்வு மற்றும் நற்பணிகளை நினைவுகூறுதல் |
| 5 ஜுலை 2025, சனி | 72 சுவிசேஷகர்களை நினைவுகூறும் பண்டிகை | 72 நற்செய்தியாளர்களை நினைவு கூறுதல் |
| 1 ஆகஸ்ட் 2025, வெள்ளி | **15-நாள் டோர்மீஷன் லெந்து** | ஆகஸ்ட் 1-லிருந்து 15-ம் தேதி வரை விசுவாசிகள் தங்களை மரணத்திற்காக ஆயத்தப்படுத்திக்கொள்வதாகும். ஏனென்றால் தேவமாதாவின் மரணம் எல்லோராலும் விரும்பத்தக்கதும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதுமான ஒரு மரணமாகும் |
| 6 ஆகஸ்ட் 2025, புதன் | **நம்முடைய கர்த்தர் மறுரூபமாகுதலின் பண்டிகை** | தாபோர் மலையில் கிறிஸ்து மறுரூபமாகிய நிகழ்வை நினைவுகூறச் செய்கின்றது |
| 15 ஆகஸ்ட் 2025, வெள்ளி | **டோர்மிஷன் பண்டிகை தியோடோகஸ் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பண்டிகை (ஷூனோயோ)** | இது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தாயாகிய தேவமாதாவின் 'நித்திரையைக்' குறிக்கும் பண்டிகையாகும் |
| 8 செப்டம்பர் 2025, திங்கள் | **தியோடோகஸ் பிறப்பின் பண்டிகை** | நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தாயாரின் பிறப்பைக் கொண்டாடும் பண்டிகையாகும் |
| 14 செப்டம்பர் 2025, ஞாயிறு | **பரிசுத்த திருச்சிலுவையின் பண்டிகை** | பரி. ஹெலன் என்ற பேரரசர் கான்ஸ்டான்டைனின் தாயார் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அறையப்பட்ட உண்மையான சிலுவையைக் கண்டுப்பிடித்த நாளாகும் |
| 23 அக்டோபர் 2025, வியாழன் | அப்போஸ்தலனாகிய பரி.யாக்கோபின் பண்டிகை | நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சகோதரனும் எருசலேமின் முதல் பேராயருமான பரி.யாக்கோபின் வாழ்க்கையை நினைவுகூறும் நாள் |

# சிறப்பு தினங்கள்

| சிறப்பு தினங்கள் | வாரம் | நாள் |
|---|---|---|
| பெற்றோர் ஞாயிறு | 3ம் ஞாயிறு | 17 நவம்பர் 2024 |
| பெண்கள் ஞாயிறு | 5ம் ஞாயிறு | 1 டிசம்பர் 2024 |
| சிறுவர் ஞாயிறு | 6ம் ஞாயிறு | 8 டிசம்பர் 2024 |
| குருவானவர் ஞாயிறு | 13ம் ஞாயிறு | 26 ஜனவரி 2025 |
| இளைஞர் ஞாயிறு | 26ம் ஞாயிறு | 27 ஏப்ரல் 2025 |
| மிஷன் ஞாயிறு | 32ம் ஞாயிறு | 9 ஜூன் 2025 |
| செமினரி ஞாயிறு | 35ம் ஞாயிறு | 5 அக்டோபர் 2025 |
| SOC ஞாயிறு | 49ம் ஞாயிறு | 29 செப்டம்பர் 2025 |